# மாணவதோழன்

# 7 ஆம் வகுப்பு

2022

# சமூக அறிவியல்

## மூன்றாம் பருவம்

**வினா - விடைத் தொகுப்பு**

Prepared By,

C.MAGENDIRAN. M.A., B.Ed.

மாணவ தோழன்

| அலகு | பொருளடக்கம் | ப.எண் |
|---|---|---|
| | **வரலாறு** | |
| 1 | புதிய சமயக்கருத்துக்களும் இயக்கங்களும் | 3 |
| 2 | தமிழ்நாட்டில் கலையும் கட்டடக்கலையும் | 6 |
| 3 | தமிழகத்தில் சமணம், பௌத்தம், ஆசீவகத் தத்துவங்கள் | 10 |
| | **புவியியல்** | |
| 1 | கண்டங்களை ஆராய்தல் - வட அமெரிக்கா மற்றும் தென் அமெரிக்கா | 14 |
| 2 | நில வரைபடத்தை கற்றறிதல் | 21 |
| 3 | இயற்கை இடர்கள் - பேரிடர் மேலாண்மை நடவடிக்கைகள் புரிந்து கொள்ளல் | 25 |
| | **குடிமையியல்** | |
| 1 | பெண்கள் மேம்பாடு | 30 |
| 2 | சந்தை மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு | 33 |
| 3 | சாலைப்பாதுகாப்பு | 35 |
| | **பொருளியல்** | |
| 1 | வரியும் அதன் முக்கியத்துவமும் | 38 |

# வரலாறு

## அலகு - 1

# புதிய சமயக் கருத்துக்களும் இயக்கங்களும்



**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்**

1. கீழ்க்காண்பவருள் யார் தன்னை தாய் யசோதாவாக பாவித்துக் கொண்டு கிருஷ்ணனின் மேல் பாடல்களைப் புனைந்துள்ளார்?

அ) பொய்கை ஆழ்வார் ஆ) பெரியாழ்வார் இ) நம்மாழ்வார் ஈ) ஆண்டாள்

2. அத்வைதம் எனும் தத்துவத்தை போதித்தவர் யார்?

அ) இராமானுஜர் ஆ) இராமாநந்தர் இ) நம்மாழ்வார் ஈ) ஆதி சங்கரர்

3. பக்திச் சிந்தனையை ஒரு மக்கள் இயக்கமாக வட இந்தியாவில் பரவச் செய்தவர் யார்?

அ) வல்லபாச்சாரியார் ஆ) இராமானுஜர் இ) இராமாநந்தர் ஈ) சூர்தாஸ்

4. சிஸ்டி அமைப்பை இந்தியாவில் பிரபலமாக்கியவர் யார் ?

அ) மொய்னுதீன் சிஸ்டி ஆ) சுரவார்டி இ) அமீர் குஸ்ரு ஈ) நிஜாமுதின் அவுலியா

5. சீக்கியர்கள் தங்களின் முதல் குரு என யாரைக் கருதுகின்றனர் ?

அ) லேனா ஆ) குரு அமீர் சிங் இ) குரு நானக் ஈ) குரு கோவிந்சிங்

**விடைகள்: 1. ஆ) பெரியாழ்வார் 2. ஈ) ஆதி சங்கரர் 3. இ) இராமாநந்தர்**
**4. அ) மொய்னுதீன் சிஸ்டி 5. இ) குரு நானக்**

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. பெரியாழ்வாரின் தொடக்ககாலப் பெயர் ___________
2. சீக்கியர்களின் புனிதநூல் ___________ ஆகும்.
3. மீராபாய் ___________ என்பாரின் சீடராவார்
4. ___________ என்பாரின் தத்துவம் விசிஷ்டாத்வைதம் என அறியப்படுகிறது
5. தர்பார் சாகிப் குருத்வாரா பாகிஸ்தானின் ___________ என்ற இடத்தில் அமைந்துள்ளது.

**விடைகள்: 1. விஷ்ணு சித்தர் 2. குரு கிரந்த் சாகிப் 3. ரவிதாஸ் 4. இராமானுஜர்**
**5. கர்தார்பூர்**

**III. பொருத்துக**

1. பாகல் - கபீர்
2. இராமசரிதமானஸ் - இராமானுஜர்
3. ஸ்ரீவைஷ்ணவம் - அப்துல் வகித் அபுநஜிப்
4. கிரந்தவளி - குரு கோவிந்சிங்
5. சுரவார்டி - துளசிதாசர்

**விடைகள்: 1. குரு கோவிந்சிங் 2. துளசிதாசர் 3. இராமானுஜர் 4. கபீர்**
**5. அப்துல் வகித் அபுநஜிப்**

**IV. 1. சரியான இணையைத் / இணைகளைத் தேர்ந்தெடுக்கவும்**

1. ஆண்டாள் - திருவில்லிபுத்தூர்
2. துக்காராம் - வங்காளம்
3. சைதன்யதேவா - மகாராஷ்டிரா

4. பிரம்ம சூத்திரம் - வல்லபாச்சாரியார்
5. குருத்வாராக்கள் - சீக்கியர்கள்

**சரியான இணைகள்: 1. ஆண்டாள் - திருவில்லிபுத்தூர் 5. குருத்வாராக்கள் - சீக்கியர்கள்**

2. **கூற்று:** குரு கோவிந்சிங்கிற்குப் பின்னர் புனித நூலான குரு கிரந்த்சாகிப் குருவாகக் கருதப்பட்டது.

**காரணம்:** குரு கிரந்த் சாகிப் நூலைத் தொகுத்தவர் குரு கோவிந்சிங்.

அ) காரணம், கூற்றின் சரியான விளக்கமல்ல .
ஆ) காரணம், கூற்றை சரியாக விளக்குகிறது.
இ) கூற்று சரி, காரணம் தவறு.
ஈ) கூற்று, காரணம் இரண்டும் தவறு.

**விடை: அ) காரணம், கூற்றின் சரியான விளக்கமல்ல.**

3. **பொருந்தாததைக் கண்டுபிடி.**

பொய்கை ஆழ்வார், பூதத்தாழ்வார். பெரியாழ்வார், ஆண்டாள் , நம்மாழ்வார்.

**விடை: ஆண்டாள்**

### V. சரியா? தவறா? காண்

1. இஸ்லாமியப் பண்பாடு பரவ சூபியிஸம் காரணமாயிற்று.
2. இடைக்காலத்தின் தொடக்கத்தில் நன்கறியப்பட்டிருந்த சிஸ்டி அமைப்பைச் சார்ந்த சூபி, நிஜாமுதீன் அவுலியா என்பவராவார் .
3. குருநானக், சீக்கியர்களின் முதல் குருவாகக் கருதப்படுகிறார் .
4. கடவுளை உய்த்துணர உணர்சிகரமான பக்தியும் தீவிர தியானமுமே சாத்தியம் என சூபிக்கள் நம்பினர் .
5. அடிப்படை தமிழ் சைவப் புனித நூல்கள் 12 ஆகும்.

**விடைகள்: 1. தவறு 2. சரி 3. சரி 4. சரி 5. சரி**

### VI. குறுகிய விடையளி

**1. திருமுறை பற்றி நீவிர் அறிவது என்ன?**

- திருமுறை என்பது சைவப் புனித நூலாகும்.
- திருமுறை 12 நூல்களைக் கொண்டுள்ளது. அவற்றில் 11 நூல்கள் நம்பி ஆண்டார் நம்பியால் தொகுக்கப்பட்ட வையாகும்.
- சேக்கிழாரின் பெரியபுராணம் 12வது நூலாகும்.

**2. நாயன்மார்கள் மொத்தம் எத்தனை பேர்? அவர்களில் முக்கியமானோர் யாவர்?**

- மரபுவழிக் கதையின்படி நாயன்மார்கள் 63 பேராவர் .
- அவர்களில் ஞான சம்பந்தர், அப்பர், சுந்தரர் (மும்மூர்த்திகள் என அழைக்கப்படுபவர்கள்) ஆகியோர் முக்கியமானோர் ஆவர்.

**3. சீக்கிய மதத்தைத் தோற்றுவிக்க குருநானக் எவ்விதம் உதவினார்?**

- குருநானக் சீக்கியர்களின் முதல் குருவாகக் கருதப்படுகிறார் .
- வேதச்சடங்குகள் சாதிப்பாகுபாடுகள் ஆகியவை மீது அவர் பெரும் வெறுப்புக் கொண்டிருந்தார்.
- குருநானக்கின் போதனைகளே பதினைந்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நிறுவப்பட்ட சீக்கிய மதத்தின் மூலக்கோட்பாடாக அமைந்தது.

**4. பண்டரிபுரம் விதோபா கோவிலுக்கு, துக்காரம் எவ்விதம் பணியாற்றினார்?**

- பதினேழாம் நூற்றாண்டில் மகாராஷ்டிராவில் வாழ்ந்த துக்காராம் கவிஞரும் திருத்தொண்டருமாவார் .
- விஷ்ணுவின் அவதாரமான விதோபா குறித்து அவர் இயற்றிய ஆன்மீகப் பாடல்களுக்காகவே (அபங்கா அல்லது கீர்த்தனைகள்) அவர் நன்கு அறியப்பட்டிருந்தார் .

**5. கபீரின் சமயக்கருத்துக்கள் கீழ்நிலை சாதிகளைச் சார்ந்தோருக்கு ஏற்புடையதாயிற்று என்பதை முன்னிலைப்படுத்து.**

- பல்வேறு சமயப்பிரிவுகள் கடவுளுக்கு வெவ்வேறு பெயர்களையும் வடிவங்களையும் கொடுத்திருந்தாலும் கடவுள் ஒருவரே என்றும், வடிவமற்றவர் என்றும் கபீர் நம்பினார் .
- சமயம், சாதி, செல்வம் ஆகியவற்றின் அடிப்படையிலான பாகுபாடுகளை அவர் கண்டனம் செய்தார். பொருளற்ற சடங்கு முறைகளையும் அவர் கண்டனம் செய்தார்

**VII. விரிவான விடையளி**

**1. தென்னிந்திய மற்றும் வட இந்தியப் பகுதிகளில் பக்தி இயக்கத்திற்கு சான்றோர் பலரது பங்களிப்பினைப் பற்றிக் கூறு.**

**தென்னிந்திய பக்தி இயக்க சான்றோர்**

- தென்னிந்தியாவில் ஆரம்ப காலத்தில் ஆழ்வார்களும் நாயன்மார்களும் பக்தி இயக்கத்தை தொடங்கி வைத்தவர்களாவர்.
- ஆதிசங்கரர் அல்லது சங்கராச்சாரியார் (ஏறத்தாழ கி.பி. 700 - 750) அத்வைதம் எனும் தத்துவத்தைப் போதித்தவராவார் .
- வேதமரபுகளை மீட்டெடுக்கும் முயற்சியில்.பிரம்ம சூத்திரம் எனும் நூலுக்கு அவர் எழுதிய உரையே அவர் ஆற்றிய பணிகளில் சாலச்சிறந்ததாகும்.
- இராமானுஜர் முன்வைத்தத் தத்துவம் விசிஷ்டாத்வைதம் ஆகும்.
- சமூக, சமத்துவக் கருத்துக்களை பரப்பிய அவர் கோவில்களில் நுழைவதற்கான சாதியக் கட்டுப்பாடுகளைக் கண்டனம் செய்தார் .
- விஷ்ணுவின் மீதும் அவரின் இணையான லட்சுமியின் மீதும் அவர்கொண்டிருந்த பக்திநெறி ஸ்ரீவைஷ்ணவம் என்றழைக்கப்படுகிறது.

**வட இந்தியப் பக்தி இயக்க சான்றோர்**

- வடஇந்தியாவில் பக்திச் சிந்தனையை ஒரு மக்கள் இயக்கமாக மாற்றியவர் இராமாநந்தர் ஆவார் .
- பின்னர் வல்லபாச்சாரியார் சூர்தாஸ் மீராபாய் சைதன்யதேவா துளசிதாசர் போன்றோர் தங்களது பாடல்கள் படைப்புகளின் வாயிலாக வட இந்தியாவில் பக்தி இயக்கத்தை பரப்பினர்.
- இந்து மற்றும் இஸ்லாம் சமயங்கல் ஒன்றின் மீது மற்றொன்று ஏற்படுத்திய தாக்கத்தின் விளைவாக சூபியிஸம், சீக்கியம் தோன்றியது.
- கபீர், குருநானக் போன்றோர் முற்போக்குத்தன்மைகொண்ட பக்தி இயக்க சான்றோர்களாவர்.

**2. சூபியிஸம் என்றால் என்ன? அது இந்தியாவில் எவ்விதம் தடம் பதித்தது?**

- சூபியிஸம் சூபி எனும் சொல் 'சுப்' எனும் சொல்லில் இருந்து தோன்றியதாகும். அதன் பொருள் கம்பளி ஆகும். சூபிக்கள் சொர சொரப்பான முரட்டுக் கம்பளியாலான உடைகளை அணிந்ததால் சூபிக்கள் என அழைக்கப்பட்டனர்.
- சூபியிஸம் அடிப்படையில் இஸ்லாமியத்தைச் சேர்ந்ததாக இருந்தாலும் அதன் மீது இந்து, பௌத்த (மகாயான) சமயக் கருத்துக்களின் தாக்கத்தைப் பெற்றிருந்தது.
- சிந்துவை அராபியர் கைப்பற்றிய காலத்தில் சூபியிஸம் இந்தியாவிற்குள் பாதம் பதித்தது.
- பத்து, பதினொன்று நூற்றாண்டுகளில் டெல்லி சுல்தான்களின் ஆட்சியின்போது அது முக்கியத்துவம் பெற்றது.

**3. இந்திய சமூகத்தில் பக்தி இயக்கம் எவ்விதத் தாக்கத்தை ஏற்படுத்தியது?**

- இந்து சமயத்திற்குப் புத்துயிர் ஊட்டப்பட்டது. அதனால் அது இஸ்லாமின் தாக்குதல்களிலிருந்து காக்கப்பட்டது.
- இஸ்லாமியத் தத்துவக்கூறுகளான கடவுள் ஒருமைப்பாடு, உலக சகோதரத்துவம்
- போன்றவை பக்தி இயக்கச் சான்றோர்களால் வலியுறுத்தப்பட்டு அமைதியும், இணக்கமும் வளர்ந்தன.

- பக்தி இயக்கம் வட்டார மொழிகளில் பக்தி இலக்கியங்களை எழுத வழிவகுத்தது. இது இந்திய மொழிகள் வளர்வதற்கான இடத்தை பக்தி இயக்கம் ஏற்படுத்திக் கொடுத்தது.
- சமஸ்கிருத மொழி இந்து அரசுகளின் அரசர்கள் நல்கிய ஆதரவால் தக்க வைக்கப்பட்டது.
- பக்தி இயக்கக் கோட்பாடுகளின் தாக்கத்தின் விளைவாய் தமிழ் மொழி சமயங்களுக்கும் சமய இலக்கியங்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்கத் தொடங்கியது.
- சாதி முறையும் சமூக ஏற்றதாழ்வுகளும் விமர்சனங்களுக்கு உள்ளாயின.

**VIII. உயர்சிந்தனை வினா**

**இஸ்லாத்தின் கடும் எதிர்ப்பையும் மீறி வேத இந்து மதத்தை பக்தி இயக்கம் பாதுகாத்தது என்பதை ஆராய்க.**

- பதினான்காம் பதினைந்தாம் நூற்றாண்டுகளில் வட இந்தியாவில் இந்துசமயத் தலைவர்கள் இஸ்லாம் குறித்து மிகவும் வேறுபட்ட இரு அணுகுமுறைகளைக் கொண்டிருந்தனர்.
- ஒரு குழுவினர் இஸ்லாமில் எது சிறந்ததோ அதை ஏற்றுக்கொண்டனர் .
- ஏனையோர் இஸ்லாம் மதத்திற்கு சமயம் மாறிச் செல்வதைத் தடுக்கும் பொருட்டு சில வழிமுறைகளைக் கையாண்டனர். இரு பிரிவினருமே இஸ்லாமை எதிர்கொண்டு செயலாற்றினர்.
- சைதன்ய தேவா, வல்லபாச்சாரியார், சூர்தாஸ், மீராபாய், துளசிதாசர் போன்ற பக்தி இயக்க சான்றோர்களால் இஸ்லாத்தின் கடும் எதிர்ப்பையும் மீறி வேத இந்து மதத்தை பக்தி இயக்கம் பாதுகாத்தது.

## அலகு - 2

# தமிழ்நாட்டில் கலையும் கட்டடக் கலையும்



**I.சரியான விடையைத் தேர்வு செய்க .**

1. தென்னிந்தியாவில் உள்ள மிகப்பழமையான கட்டுமானக் கோவில் எது?
   அ) கடற்கரைக் கோவில் ஆ) மண்டகப்பட்டு
   இ) கைலாசநாதர் கோவில் ஈ) வைகுந்தபெருமாள் கோவில்

2. மாமல்லபுரத்திலுள்ள நினைவுச் சின்னங்களும் கோவில்களும் யுனெஸ்கோவால் எப்போது அங்கீகரிக்கப்பட்டது?
   அ) 1964 ஆ) 1994 இ) 1974 ஈ) 1984

3. முற்காலச் சோழர் கட்டடக்கலையின் சிறப்பம்சம் யாது?
   அ) புடைப்புச் சிற்பங்கள் ஆ) விமானங்கள் இ) பிரகாரங்கள் ஈ) கோபுரங்கள்

4. அழகிய நம்பி கோவில் எங்கமைந்துள்ளது?
   அ) திருக்குறுங்குடி ஆ) மதுரை இ) திருநெல்வேலி ஈ) திருவில்லிபுத்தூர்

5. வைகுண்ட பெருமாள் கோயிலைக் கட்டியவர் யார்?
   அ) மகேந்திரவர்மன் ஆ) நரசிம்மவர்மன் இ) ராஜசிம்மன் ஈ) இரண்டாம் ராஜராஜன்

**விடைகள்: 1. அ) கடற்கரைக் கோவில் 2. ஈ) 1984 3. ஆ) விமானங்கள்**
**4. அ) திருக்குறுங்குடி 5. இரண்டாம் நந்திவர்மன்**

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக**

1. பல்லவ அரசர் மகேந்திரவர்மனால் முதன் முதலாய் கட்டப்பட்ட குடைவரைக் கோவில் ____________ என்ற இடத்தில் உள்ளது.
2. முற்கால சோழர் கட்டடக்கலை ____________ பாணியைப் பின்பற்றியது
3. மதுரை மீனாட்சியம்மன் கோவிலில் உள்ள மிகவும் புகழ்பெற்ற மண்டபம் ________ ஆகும்
4. பிற்கால சோழர் காலம் பொலிவுமிக்க ____________ பெயர்பெற்றது
5. விஜயநகர கால கட்டடக்கலையின் தனித்துவ அடையாளம் ____________ ஆகும்.

**விடைகள்: 1. மண்டகப்பட்டு 2. செம்பியன் மகாதேவி 3. புதுமண்டபம் 4. கோபுரங்களுக்கு 5. மண்டபங்கள்**

**III. பொருத்துக.**

1. ஏழு கோவில்கள் - மதுரை
2. இரதிமண்டபம் - தாராசுரம்
3. ஐராவதீஸ்வரர்கோவில் - திருக்குறுங்குடி
4. ஆதிநாதர் கோவில் - கடற்கரைக்கோவில்
5. புதுமண்டபம் - ஆழ்வார் திருநகரி

**விடைகள்: 1. கடற்கரைக்கோவில் 2. திருக்குறுங்குடி 3. தாராசுரம் 4. ஆழ்வார் திருநகரி 5. மதுரை**

**IV. தவறான இணையைக் காண்க**

(1) 1. கிருஷ்ணாபுரம் கோவில் - திருநெல்வேலி
2. கூடலழகர் கோவில் - ஆழ்வார் திருநகரி
3. சேதுபதிகள் - மதுரை நாயக்க அரசின் சிற்றரசர்கள்
4. ஜலகண்டேஸ்வரர் கோவில் - வேலூர்

**விடை: 2. கூடலழகர் கோவில் - ஆழ்வார் திருநகரி**

(2) **கூற்று:** இராமேஸ்வரம் கோவிலின் சிறப்புமிக்க பிரகாரங்கள் நம் கவனத்தை ஈர்ப்பதாய் அமைந்துள்ளன.

**காரணம்:** உலகிலேயே மிக நீளமான கோவில் பிரகாரங்களை இக்கோவில் கொண்டுள்ளது.

அ) காரணம், கூற்றை விளக்கவில்லை
ஆ) காரணம், கூற்றை விளக்குகின்றது
இ) கூற்று சரி, காரணம் தவறு
ஈ) கூற்று, காரணம் இரண்டும் தவறு **விடை: ஆ) காரணம், கூற்றை விளக்குகின்றது**

**3. பொருந்தாததைக் கண்டுபிடி**

திருவில்லிபுத்தூர் அழகர்கோவில், ஸ்ரீரங்கம், காஞ்சிபுரம், திருவண்ணாமலை

**விடை: ஸ்ரீரங்கம்**

**4. பின்வரும் காலத்திற்குப் பெயரிடுக.**

அ) கி.பி. 600 - 850 - **பல்லவர் காலம்**
ஆ) கி.பி. 850 - 1100 - **முற்கால சோழர்கள் காலம்**
இ) கி.பி. 1100 - 1350 - **பிற்கால சோழர்கள் காலம்**
ஈ) கி.பி. 1350 - 1600 - **விஜயநகர / நாயக்கர்கள் காலம்**

**5. சரியான வாக்கியங்களைக் கண்டுபிடி**

1. மிகப்பெரும் கருங்கல் பாறையின் மீது புடைப்புச் சிற்பமாக அர்ச்சுனன் தவமிருக்கும் காட்சி செதுக்கப்பட்டுள்ளது.
2. பல்லவர்கால கட்டடக்கலைப் பாணியில் மதுரை மீனாட்சி அம்மன் கோவில் அமைந்துள்ளது.

3. பின்னையார்பட்டியிலுள்ள குகைக் கோவில் பிற்கால பாண்டியரின் பங்களிப்பாகும்.
4. மதுரை நாயக்க அரசின் சிற்றரசர்களான சேதுபதிகள் மதுரை மீனாட்சி அம்மன் கோவிலுக்கு சிறந்த பங்களிப்பைச் செய்துள்ளனர்.

**விடை: 1 மற்றும் 3 சரியான வாக்கியங்கள்**

**V. சரியா ? தவறா ?**

1. இராஜசிம்மன் காஞ்சி கைலாசநாதர் கோயிலைக் கட்டினார்.
2. முற்கால பாண்டியர், பிற்காலச் சோழரின் சமகாலத்தவர் ஆவர்.
3. பாண்டியக் கட்டடக்கலையின் சிறப்பம்சமாய் திகழ்வது குடைவரை மற்றும் கட்டுமானக் கோவில்கள் ஆகும்.
4. பிரகதீஸ்வரர் கோவில் இராஜேந்திர சோழனால் கட்டப்பட்டது.
5. தாதாபுரம் கோவிலில் விஜயநகர மற்றும் நாயக்கர் கால ஓவியங்களைக் காணமுடியும்.

**விடை: 1. சரி 2. தவறு 3. சரி 4. சரி 5. தவறு**

**VI. குறுகிய விடையளி**

**1. பஞ்சபாண்டவ இரதம் பற்றி குறிப்பு வரைக.**

- மகாபலிபுரத்திலுள்ள ஒற்றைக் கல்லில் செதுக்கப்பட்டுள்ள திரௌபதி இரதம், தர்ம ராஜா இரதம், பீம ரதம், அர்ச்சுன இரதம், நகுல சகாதேவ இரதம் ஆகியன பஞ்ச பாண்டவ இரதங்கள் என்றழைக்கப்படுகிறது.
- இது தமிழ் திராவிட கோவில் கட்டடக் கலை மரபிற்கு சிறந்த எடுத்துக்காட்டுகளாகத் திகழ்கின்றது

**2. சித்தன்னவாசல் ஓவியங்கள் பற்றிக் கூறுக.**

- சித்தன்னவாசல் சமணத்துறவிகள் வாழ்ந்த குகையாகும்.
- அவர்கள் குகைச் சுவர்களில் சாந்துபூசி, ஈரம் காய்வதற்கு முன்னரே ஓவியங்களைத் தீட்டியுள்ளனர்.
- சித்தன்னவாசல் ஓவியங்கள் அஜந்தா ஓவியங்களுடன் சில ஒப்புமைகளைப் பெற்றுள்ளன.

**3. தஞ்சை பெரிய கோவிலின் சிறப்பம்சங்களைக் குறிப்பிடுக.**

- தஞ்சாவூர் பெரிய கோவிலின் விமானம் 216 அடிகள் உயரம் கொண்டதாகும்.
- உலகத்தில் மனிதனால் கட்டப்பட்ட மிக உயரமான சிகரங்களில் அதுவும் ஒன்றாகும். அதன் சிகரம் தட்சிண மேரு என்றழைக்கப்படுகிறது.
- இங்குள்ள 16 அடி நீளமும் 13 அடி உயரமும் கொண்ட மிகப்பெரும் நந்தியின் சிலை ஒரே பாறையில் செதுக்கப்பட்டதாகும்.

**4. இராமேஸ்வரம் கோவில் நம் கவனத்தை ஈர்க்கும் விதத்தைக் கூறுக.**

- இராமேஸ்வரம் கோவிலின் சிறப்புமிக்க பிரகாரங்கள் நம் கவனத்தை ஈர்ப்பதாய் அமைந்துள்ளன.
- உலகிலேயே மிகவும் நீளமான கோவில் பிரகாரங்கள் இவையே எனச் சொல்லப்படுகிறது.
- 1200க்கும் மேற்பட்ட தூண்கள் அவற்றிலுள்ள அலங்கார வேலைப்பாடுகளை தனிச்சிறப்பு கொண்டனவாகும்.

**VII. விரிவான விடையளி**

**1. பல்லவர் காலத்தில் கோவில் கட்டடக்கலை குடைவரைக் கோவில்கள் எனும் நிலையிலிருந்து கட்டுமானக் கோவில்கள் எனும் மாற்றத்திற்கு உள்ளானது விளக்குக.**

- குடைவரைக் கோவில்கள் அமைக்கும் முறை கி.பி.700 க்குப் பின்னர் மறைந்து பெரிய வடிவிலான கட்டுமானக் கோவில்கள் கட்டப்படுவதற்கு வழிவிட்டது.
- சிற்பிகள் தங்கள் திறமைகள் அனைத்தையும் பயன்படுத்தி கல்லிலே கலைவண்ணம் காண, கட்டுமானக் கோவில்கள் அதிக வாய்ப்பினைக் கொடுத்தது இதற்கு ஒரு காரணமாக இருக்கலாம்.

- காஞ்சி கைலாசநாதர் கோவில், வைகுண்டப் பெருமாள் கோவில், மகாபலிபுரத்திலுள்ள ஏழு கோவில் ஆகியன பல்லவர் கால கட்டுமான கோவில்களுக்கு சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

**2. விஜயநகர, நாயக்கர் கால கட்டடக்கலையானது பல்லவர் மற்றும்பிற்கால சோழர் கட்டடக்கலையிலிருந்து எவ்விதம் வேறுபடுகிறது என விவாதிக்கவும்.**

- பாறைகளில் சிற்பங்களைப் படைப்பது பல்லவர்கால சிறப்புக்கூறாக அமைந்திருந்தது.
- முற்காலச் சோழர்களின் காலம் பேரழகுமிக்க விமானங்களுக்குப் பெயர்பெற்றாகும்.
- பிற்காலச் சோழர்கள் காலம் பொலிவுமிக்க கோபுரங்களுக்காகப் புகழ்பெற்றது.
- மண்டபங்கள் விஜயநகர காலப்பகுதியின் தனிச்சிறப்பாகும்.
- மேலும் மண்டபத்திலுள்ள ஒற்றைக்கல் தூண்கள், தெப்பக்குளங்கள், நான்குபுறமும் பெரிய கோபுரங்களுடன்கூடிய நுழைவாயில்கள் விஜயநகர கால கட்டடக்கலையின் சிறப்பம்சமாகும்.

**VIII. உயர்சிந்தனை வினா**

**1. திராவிடக் கட்டடக்கலை உள்நாட்டில் தோன்றியதே விளக்குக.**

- திராவிடக் கட்டடக்கலை நம்மண்ணில் பிறந்ததாகும்.
- காலப்போக்கில் பரிணாமச் செயல்பாட்டின் வழியாய் அக்கலை மேம்பாடு அடைந்தது.
- தமிழ் திராவிடக் கட்டடக் கலையின் மரபிற்கு மகாபலிபுரத்திலுள்ள ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந்த காலத்தில் முந்திய குடைவரைக் கோவில்களே (குகைக்கோவில்கள்) எடுத்துக்காட்டுகளாகும்.

**2. கோயில்கலை வளர்ச்சியானது நாயக்கர் காலத்தில் சிறந்தோங்கியது என்பதை தெளிவுபடுத்துக.**

- பதினைந்தாம் நூற்றாண்டு முதல் பதினேழாம் நூற்றாண்டு வரையிலான விஜயநகர, நாயக்க கட்டடக் கலையின் முக்கியக் கூறுகளாகத் திகழ்பவை அழகூட்டப்பட்ட மண்டபங்கள், அலங்கரிக்கப்பட்ட தூண்கள், இயற்கை வடிவ அளவிலான சிலைகள், கோபுரங்கள், பிரகாரங்கள், இசைத்தூண்கள் மலர் அலங்கார வேலைப்பாடுகள், கல்லால் ஆன சாளரங்கள், ஆகியனவாகும்.
- மேலும் கோவில்களோடு சேர்ந்து தெப்பக்குளங்கள் அமைக்கப்பட்டன .
- கோவில்களுக்கான நுழைவாயில்கள் நான்குபுறங்களிலும் மிகப்பெரும் கோபுரங்களுடன் கட்டப்பட்டன .
- மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோவிலில் அமைந்துள்ள 1000-கால் மண்டபம், புதுமண்டபம் , திருக்குறுங்குடி நாங்குநேரி வானமாமலையார் கோவில் ஆகியவற்றிலுள்ள இரதிமண்டபம் ஆகியவை நாயக்கர் கால மண்டபக் கட்டடக்கலைக்கு சிறப்புமிக்க எடுத்துக்காட்டுகளாகும்.
- ஒற்றைக்கல்லில் மிகப்பெரிய யாளி, குதிரை வடிவச்சிலைகள், புராண இதிகாசக் காட்சிகள், மனிதர்களின் வடிவங்கள், விலங்குகள், பூவேலைப்பாடுகள், கற்சாளரங்கள் ஆகியவற்றின் வாயிலாக கோயில்கலை வளர்ச்சியானது நாயக்கர் காலத்தில் சிறந்தோங்கியது என்பதை அறியலாம்.

## அலகு - 3

# தமிழகத்தில் சமணம்,பௌத்தம், ஆசீவகத் தத்துவங்கள்



**I. சரியான விடையைத் தேர்வு செய்க.**

1. சமணப்பேரவை முதன்முதலில் எங்கு கூடி தங்களின் சமய போதனைகளையும் ஒழுக்க விதிகளையும் தொகுக்க முற்பட்டனர்?

அ) பாடலிபுத்திரம் ஆ) வல்லபி இ) மதுரா ஈ) காஞ்சிபுரம்

2. ஆகம சூத்திரங்கள் எம்மொழியில் எழுதப்பட்டன ?

அ) அர்த்த-மகதி பிராகிருதம் ஆ) இந்தி இ) சமஸ்கிருதம் ஈ) பாலி

3. கீழ்க்கண்டவற்றுள் எது களப்பிரர்களால் ஆதரிக்கப்பட்டது ?

அ) புத்தமதம் ஆ) சமணமதம் இ) ஆசீவகம் ஈ) இந்து மதம்

4. தலையணைப்பகுதி செதுக்கப்படாமல் உள்ள கற்படுக்கைகளை எங்கு காணலாம்?

அ) வேலூர் ஆ) காஞ்சிபுரம் இ) சித்தன்னவாசல் ஈ) மதுரை

5. கழுகு மலை குடைவரைக் கோவில் யாரால் கட்டப்பட்டதாகக் கருதப்படுகிறது?

அ) மகேந்திரவர்மன் ஆ) பராந்தக நெடுஞ்சடையான்

இ) பராந்தக வீரநாராயண பாண்டியன் ஈ) இரண்டாம் ஹரிஹரர்

**விடைகள்: 1. அ) பாடலிபுத்திரம் 2. அ) அர்த்த-மகதி பிராகிருதம் 3. ஆ) சமணமதம் 4. அ) வேலூர் 5. ஆ) பராந்தக நெடுஞ்சடையான்**

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. தமிழ் நாட்டிலுள்ள சமணச் சிலைகளில் மிக உயரமாகக் கருதப்படும் சிலை ___________
2. புத்த சரிதத்தை எழுதியவர் ___________ ஆவார்
3. ___________ நூற்றாண்டில் சீனப் பயணி யுவான்சுவாங் பல்லவ நாட்டிற்கு வந்திருந்தார்.
4. பௌத்தம் சரிவைச் சந்தித்துக் கொண்டிருக்கும் சமயம் என _________ எடுத்துரைக்கின்றது
5. மௌரியப் பேரரசர் அசோகரும் அவருடைய பேரன் தசரதாவும் ___________ ஆதரித்தனர்.

**விடைகள்: 1. நேமிநாதர் 2. அஸ்வகோசர் 3. கி.பி. 7 ம் நூற்றாண்டு 4. மத்தவிலாச பிரகாசனம் 5. ஆசீவர்களை**

**III. பொருத்துக.**

1. கல்ப சூத்ரா - திருத்தக்கத் தேவர்
2. சீவகசிந்தா மணி - மதுரை
3. நேமிநாதர் - நாகசேனர்
4. மிலிந்த பன்கா - பத்ரபாகு
5. கீழக்குயில் குடி - 22வது தீர்த்தங்கரர்

**விடைகள்: 1. பத்ரபாகு 2. திருதக்கத்தேவர் 3. 22வது தீர்த்தங்கரர் 4. நாகசேனர் 5. மதுரை**

**IV. கீழ்க் காண்பனவற்றிற்கு விடையளி**

**1. பொருந்தாததைக் காண்**

திருப்பருத்திக்குன்றம், கீழக்குயில் குடி, கழுகுமலை, நாகப்பட்டினம், சித்தன்னவாசல்

**2. கூற்று:** பழைய மதங்களின் குருமார்களிடமிருந்து தான் கற்றுக் கொள்வதற்கு எதுவுமில்லை என கௌதமர் தெரிந்து கொண்டார்.

**காரணம்:** துறவு வாழ்க்கையை மேற்கொள்வதே முக்தி அடைவதற்கான ஒரேவழி என மதங்கள் அறிவித்தன.

அ) கூற்று சரி, காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம்

ஆ) கூற்று சரி , காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமல்ல .

இ) கூற்று, காரணம் இரண்டுமே தவறு.

ஈ) கூற்று தவறு ஆனால் காரணம் சரி.

**3. சரியான கூற்றினைக் / கூற்றுகளைக் காண்க**

i) கி.மு. ஆறாம் நூற்றாண்டில், இந்தியாவில் வெவ்வேறான 62 தத்துவ சமயப்பள்ளிகள் செழிப்புற்று இருந்தன.

ii) 'பள்ளி' என்பது புத்தமதத்தாரின் கல்வி மையமாகும்.

iii) அரசர்கள் அளித்த ஆதரவினால் இஸ்லாமிய ஆட்சிக்கு முந்தைய இந்தியா, பல விகாரைகளைக் கொண்ட நாடாக விளங்கியது.

iv) ஆசீவகம் பதினைந்தாம் நூற்றாண்டுவரை தொடர்ந்து செயல்பட்டது.

அ) (i) மற்றும் (iii) சரி

ஆ) (i, ii) மற்றும் (iv) சரி

இ) (i) மற்றும் (ii) சரி

ஈ) (ii, iii) மற்றும் (iv) சரி

**4. தவறான இணையைக் காண்க**

| | | |
|---|---|---|
| 1. | பார்சவநாதர் | - 22 வது தீர்த்தங்கரர் |
| 2. | மகாபாஷ்யா | - இலங்கையைச் சேர்ந்த வரலாற்றுத் தொகுப்பு |
| 3. | விசுத்திமக்கா | - புத்தகோசா |
| 4. | புத்தர் | - எண்வகை வழிகள் |

**விடைகள்: 1. நாகப்பட்டினம் 2. அ) கூற்று சரி, காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம்**
**3. அ) (i) மற்றும் (iii) சரி 4. பார்சவநாதர் - 22 வது தீர்த்தங்கரர்**

**V. சரியா? தவறா ?**

1. 12 வது ஆகமசூத்திரம் தொலைந்து போனதாகக் கருதப்படுகிறது.
2. வரலாறு முழுவதிலும் ஆசீவகர்கள் அனைத்து இடங்களிலும் அடக்க முறையைச் சந்திக்க நேர்ந்தது.
3. சமண நிறுவனங்களில் சமூக, சமய வேறுபாடுகளின்றி அனைவருக்கும் கல்வி கற்பிக்கப்பட்டது.
4. நாளந்தா, தட்சசீலம், விக்கிரமசீலா ஆகியன மிகச்சிறந்த புனிதத்தலங்களாயின.
5. சோழர்காலம் முதலாகவே பௌத்தம் சைவ, வைணவ சமயங்களின் சவால்களை எதிர் கொண்டது.

**விடைகள்: 1. சரி 2. சரி 3. சரி 4. தவறு 5. தவறு**

**VI. கீழ்க்காண்பனவற்றுக்கு விடையளி**

**1. சமணத்தின் ஐம்பெரும் உறுதிமொழிகளைப் பட்டியலிடுக.**

1. எந்த உயிரினத்தையும் துன்புறுத்தாமலிருப்பது - அகிம்சை;
2. உண்மை - சத்யா;
3. திருடாமை - அசௌர்யா;
4. திருமணம் செய்து கொள்ளாமை - பிரம்மச்சரியா;
5. பணம், பொருள், சொத்துக்கள் மீது ஆசை கொள்ளாமை - அபரிக்கிரகா

**2. புத்தரின் நான்கு பேருண்மைகளைக் கூறுக?**

1. வாழ்க்கை துயரம், வயோதிகம், நோய், இறுதியில் மரணம் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

2. துயரங்கள் ஆசையினாலும் வெறுப்பினாலும் ஏற்படுகின்றன.
3. ஆசையைத் துறந்துவிட்டால் துயரங்களை வென்று மகிழ்ச்சியை அடையலாம்
4. ஒருவர் எண்வகை வழிகளைப் பின்பற்றினால் உண்மையான மகிழ்ச்சியும், நிறைவும் கைவரப் பெறலாம்.

**3. திரிபிடகாவின் மூன்று பிரிவுகளை விளக்குக.**

- **வினய பிடகா:** இதில் பௌத்தத் துறவிகளுக்கான (பிட்சுக்கள்) விதிமுறைகள் இடம் பெற்றுள்ளன. தூய்மையான நடத்தையைப் பெற இவை கட்டாயம் பின்பற்றப்பட வேண்டும்.
- **சுத்த பிடகா:** விவாதங்களைச் சான்றுகளாகக் கொண்டு பௌத்தத்தின் மூலக்கோட்பாடுகளைக் கூறுகின்றது.
- **அபிதம்ம பிடகா:** இது நன்னெறிகள், தத்துவம், நுண்பொருள் கோட்பாடு ஆகியன குறித்து விளக்குவதாகும்

**4. சித்தன்னவாசலின் முக்கியத்துவத்தை வெளிக்கொணர்க.**

- புதுக் கோட்டை மாவட்டத்திலுள்ள சித்தன்னவாசல் குகை நிலத்திலிருந்து 70 மீட்டர் உயரமுடைய பெரும்பாறையொன்றில் அமைந்துள்ளது.
- அறிவர் கோவில் எனும் பெயருடைய சித்தன்னவாசல் குகைக்கோவில் குன்றின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ளது.
- இக்கோவிலில் காணப்படும் சுவரோவியங்கள் புகழ்பெற்ற அஜந்தா சுவரோவியங்களுடன் ஒப்புமை கொண்டுள்ளன.

VII. **விரிவான விடையளி**

**1. சமணம், பௌத்தம் பற்றி அறிய உதவும் சான்றுகளை வரிசைப்படுத்துக.**

**சமண சான்றுகள்**

- **ஆகம சூத்திரங்கள் -** 12 நூல்கள் (மகாவீரரின் நேரடி போதனைகள்).
- **ஆகமங்கள் அல்லாத இலக்கியங்கள்** - 84 நூல்கள் (41 சூத்திரங்கள், 12 உரைகள், ஒரு மாபெரும் உரை(மகா பாஷ்யா)
- **மற்றவை** - பஞ்சதந்திரம், கல்பசூத்ராவின் ஜைனசரிதா, திருத்தக்கத் தேவரின் சீவகசிந்தாமணி.

**பௌத்த சான்றுகள்**

- **திரிபிடகா** (மூன்று கூடைகள்) - வினய பிடகா, சுத்த பிடகா, அபிதம்ம பிடகா.
- **ஜாதகங்கள்**: பௌத்த இலக்கியங்களில் காணப்படும் புத்தருடைய வாழ்க்கை தொடர்பான பல்வேறு கதைகளைக் கூறும் நூல்
- **புத்தவம்சா** : இது கவிதை வடிவில் எழுதப்பட்டுள்ள மரபுவழிக் கதையாகும்.
- **மிலிந்த பன்கா** - கிரேக்க - பாக்டீரியன் அரசன் மிலிந்தா என்பவருக்கும் பௌத்த பிட்சுவான நாகசேனர் என்பவருக்குமிடையே பௌத்தத்தின் சில அம்சங்கள் குறித்து நடைபெற்ற உரையாடல்
- **மகாவம்சம், தீபவம்சம்** - இலங்கையின் புகழ்பெற்ற வரலாற்றுத் தொகுப்புகள்.
- புத்தகோசாவால் எழுதப்பட்ட விசுத்திமக்கா.
- அஸ்வகோஷரால் எழுதப்பட்ட புத்தசரிதா

**2. தமிழ்நாட்டில் கண்டறியப்பட்ட சமணம், பௌத்தம், சார்ந்த ஆதார எச்சங்களை விளக்கமாய் பட்டியலிடுக.**

**சமண ஆதார எச்சங்கள்**

- சித்தன்னவாசல் குகைக்கோவில் - புதுக்கோட்டை மாவட்டம்
- திரிலோக்கியநாத ஜைன சுவாமி கோவில், சந்திரபிரபா கோவில் - திருப்பருத்திக் குன்றம்
- கழுகுமலை சமண குடைவரைக் கோவில்க ள்
- வேலூர் மாவட்டம் பைரவ மலையிலுள்ள கற்படுக்கைகள்
- திருமலை நேமிநாதர் சிலை

- மதுரை கீழக்குயில்குடி குன்றுகள்

**பௌத்த ஆதார எச்சங்கள்**

- பஞ்சபாண்டவ மலை நினைவுச்சின்னங்கள்
- சீத்தலைச்சாத்தனாரின் மணிமேகலை
- நாகப்பட்டினத்தில் கிடைத்த புத்த சிலைகள்
- தியாகனூர் புத்தர் சிற்பம்
- பத்மாசன புத்த சிலை - திருநாட்டியட்டாங்குடி

**3. ஆசீவகத் தத்துவத்தின் சாரம் மற்றும் அது தமிழ்நாட்டில் தோன்றிய விதம் குறித்து விவாதிக்க.**

- ஆசீவகர்கள் வினைப்பயன்(கர்மா), மறுபிறவி, முன்தீர்மானம் ஆகிய கோட்பாடுகளில் நம்பிக்கை கொண்டிருந்தனர்.
- ஆசீவகப் பிரிவின் தலைவர் கோசலா மன்காலி புத்தா ஆவார்.
- ஆசீவகர்கள் மிகக்கடுமையான துறவறத்தைக் கடைபிடித்தனர்.
- பல்லவர், சோழர், ஹோய்சாளர் ஆகியோரது ஆட்சிக் காலங்களில் கிராம சமூகத்தினர் ஆசீவகர்கள் மீது சிறப்பு வரிகளை விதித்தனர்.
- இதுபோன்ற இடர்ப்பாடுகள் இருந்தபோதிலும் 14ஆம் நூற்றாண்டு வரை இன்றைய கர்நாடகா, தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில், பாலாற்றின் பகுதிகளில் (வேலூர், காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்கள்) ஆசீவகம் செல்வாக்கு பெற்றுத்திகழ்ந்தது.
- இறுதியில் ஆசீவகர்கள் வைணவத்தால் ஈர்த்துக் கொள்ளப்பட்டதாகத் தெரிகிறது.

**VIII. உயர் சிந்தனை வினா**

**1. அவைதீக மதங்களுக்கும் வேத மதத்திற்கும் உள்ள பொதுவான அம்சங்களையும் வேறுபாடுகளையும் அலசி ஆராய்க.**

- அவைதீக மதங்களான சமணம், பௌத்தம் மற்றும் ஆசீவகம் போன்றவை மதச் சடங்குகளுக்காக விலங்குகள் பலியிடுவதை எதிர்த்தனர்.
- அவர்களது துறவும், இரந்துண்ணுதலும், சொத்துகளைத் துறந்து வாழும் முறையும் அப்புதிய போதகர்களை மக்களுக்கு ஏற்புடையவர்களாக ஆக்கின.
- வேதச் சடங்குகளின் ஆடம்பரம், விலங்குகளைப் பலியிடுதல், சொத்துகள் மீதான ஆசை போன்ற செய்கைகள் மக்களை வெறுப்புறச் செய்தன.
- இதுவே காலப்போக்கில் அவர்களை சமணம் மற்றும் புத்தமதங்களை நோக்கி இட்டுச் சென்றது.

**2. ஏன் இத்தகைய அவைதீக மதங்கள் இந்தியாவின் முக்கிய மதங்களாய் உருவெடுக்க முடியவில்லை?**

- அரச ஆதரவின்மை, பிரிவு மனப்பான்மை, இந்து மதத்தின் எழுச்சி, வெளிநாட்டவர் படையெடுப்புகள் போன்ற காரணங்களினால் அவைதீக மதங்கள் இந்தியாவின் முக்கிய மதங்களாய் உருவெடுக்க முடியவில்லை.

# புவியியல்

## அலகு - 1

## கண்டங்களை ஆராய்தல் - வட அமெரிக்கா மற்றும் தென் அமெரிக்கா



**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. வட அமெரிக்காவையும் ஆசியாவையும் ____________ பிரிக்கிறது.
   அ) பேரிங் நீர் சந்தி ஆ) பாக் நீர் சந்தி
   இ) மலாக்கா நீர் சந்தி ஈ) ஜிப்ரால்டர் நீர் சந்தி

2. ______ உலகின் சர்க்கரைக் கிண்ணம் என அழைக்கப்படுகிறது.
   அ) மெக்ஸிகோ ஆ) அமெரிக்கா இ) கனடா ஈ) கியூபா

3. ________ வட அமெரிக்காவின் நீளமான ஆறுகள் ஆகும்.
   அ) மிஸிஸிப்பி மற்றும் மிஸ்சௌரி ஆ) மெக்கென்ஸி ஆறு
   இ) புனித லாரன்சு ஆறு ஈ) கொலரடோ ஆறு

4. உலகின் மிக நீண்ட மலைத்தொடர் ____________.
   அ) ஆன்டிஸ் ஆ) ராக்கி இ) இமயமலை ஈ) ஆல்ப்ஸ்

5. பூமத்திய ரேகை பகுதியில் இருப்பதால் ________ வடிநிலப் படுகை தினந்தோரும் மழை பெறுகிறது.
   அ) மெக்கென்ஸி ஆ) ஒரினாகோ இ) அமேசான் ஈ) பரானா

**விடைகள்: 1. அ) பேரிங் நீர் சந்தி 2. ஈ) கியூபா 3. அ) மிஸிஸிப்பி மற்றும் மிஸ்சௌரி 4. அ) ஆன்டிஸ் 5. இ) அமேசான்**

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. வட அமெரிக்காவின் தாழ்வான பகுதியான _______ கடல் மட்டத்திலிருந்து 86 மீட்டர் ஆழத்தில் உள்ளது.
2. உலகின் தலை சிறந்த மீன்பிடித் தளமாக _______ விளங்குகிறது.
3. சிலி அர்ஜென்டினா எல்லையில் அமைந்துள்ள _____ ஆண்டிஸ் மலைத் தொடரின் உயரமான சிகரமாகும்.
4. பூமத்திய ரேகைப் பகுதியில் இருக்கும் __________ உலகின் நுரையீரல் என அழைக்கப்படுகிறது.
5. _______ ற்கு உலகின் காப்பி பானை என்ற பெயரும் உண்டு.

**விடைகள்: 1. மரணப் பள்ளத்தாக்கு 2. கிரண்ட் பேங்க் 3. அகான் காகுவா 4. அமேசான் காடுகள் 5. பிரேசில்**

**III. பொருத்துக.**

| | |
|---|---|
| 1. மெக்கென்லீ சிகரம் | - வெப்ப மண்டல காடுகள் |
| 2. கிராண்ட் கேன்யான் | - பறக்க இயலாத பறவை |
| 3. எபோனி | - கொலரடோ ஆறு |
| 4. நான்கு மணி கடிகார மழை | - 6194 மீ |
| 5. ரியா | - பூமத்திய ரேகை பகுதி |

**விடைகள்: 1. 6194 மீ 2. கொலரடோ ஆறு 3. வெப்ப மண்டல காடுகள் 4. பூமத்திய ரேகை பகுதி 5. பறக்க இயலாத பறவை**

IV. **காரணம் கூறுக.**

**1. வட அமெரிக்காவின் கிழக்கு கடற்கரை பகுதிகள் குறிப்பாக அமெரிக்கா மிதமான காலநிலையை அனுபவிக்கிறது.**

- மிஸிஸிப்பி, மிசௌரி ஆறுகளின் முகத்துவாரங்கள், வளைகுடா கடற்கரைப்பகுதிகள் மற்றும் அட்லாண்டிக் பெருங்கடலின் வெப்ப நீரோட்டங்கள் காரணமாகும்.

**2. அமெரிக்கா "உருகும் பானை" என அழைக்கப்படுகிறது.**

- அமெரிக்காவில் நூற்றுக்கணக்கான பல கலாச்சாரங்கள் ஒன்றோடு ஒன்று இணைந்து, கலந்து புதிய கலாச்சாரத்தை உருவாக்குகின்றன.
- இதனால் அமெரிக்கா "உருகும் பானை" என அழைக்கப்படுகிறது.

**3. கியுடோ மற்றும் அமேசான் படுகை ஒரே அட்சரேகையில் அமைந்திருந்தாலும் கியுடோ நிரந்தரமான வசந்த காலத்தை அனுபவிக்கிறது.**

- ஏனெனில் **கியுடோ** 9350 அடி அல்லது 2749.88 மீட்டர் கடல் மட்டத்திற்கு மேல் உயரத்தில் அமைந்து மிதமான காலநிலையை கொண்டுள்ளது

**4. வெப்பமண்டல மீன்களை அதிக அளவில் உற்பத்தி செய்யும் நாடு பெரு.**

- ஹம்போல்ட் (பெரு) குளிர் நீரோட்டமானது மீன்களின் முக்கிய உணவான பிளாங்டன்களை (Plankton) பெரு நாட்டிற்கு அருகில் கொண்டு சேர்ப்பதால் மீன் உற்பத்தி அதிகமாக செய்யப்படுகின்றன.

V. **வேறுபடுத்துக.**

**1. ராக்கி மலைகள் மற்றும் அப்பலேஷியன் மலைகள்**

| | ராக்கி மலைகள் | அப்பலேஷியன் மலைகள் |
|---|---|---|
| 1. | வட அமெரிக்கா கண்டத்தின் மேற்குப் பகுதியிலுள்ள இளம் மடிப்பு மலைத்தொடர். | வட அமெரிக்கா கண்டத்தின் கிழக்குப் பகுதியிலுள்ள பழமையான மடிப்பு மலைத்தொடர். |
| 2. | தொடர்ச்சியான மலைத்தொடர் | தொடர்ச்சியற்ற மலைத்தொடர் |

**2. பிரெய்ரி மற்றும் பாம்பாஸ் புல்வெளிகள்**

| | | பிரெய்ரி புல்வெளி | பாம்பாஸ் புல்வெளிகள் |
|---|---|---|---|
| 1. | **பகுதி** | ஐக்கிய அமெரிக்க நாடுகளின் மத்திய பகுதி மற்றும் மத்திய கனடா | அர்ஜென்டினாவின் வடகிழக்கு, உருகுவே, பிரேசிலின் தென்பகுதி. |
| 2. | **தாவரங்கள்** | புற்கள், முட்புதர்கள், மூலிகைகள். | குட்டையான புற்கள். |
| 3. | **விலங்குகள்** | கொயோட்டோ நாய், வளை தோண்டும் கொறி விலங்கு வகை, குழி முயல், புல்வெளி நாய், காட்டு எருமை | ரியா, சாம்பார் மான் ஜாகுவார் ஒட்டகம், மியூல் மற்றும் கலைமான். |

**3. துந்திர பகுதி மற்றும் டைகா பகுதி**

| | | துந்திர பகுதி | டைகா பகுதி |
|---|---|---|---|
| 1. | **பகுதி** | கனடாவின் வடக்கு கடற்கரைப் பகுதிகள் மற்றும் வட தீவுகள் | தென் மத்திய அலாஸ்கா மற்றும் வடகிழக்கு கனடா |
| 2. | **தாவரங்கள்** | பாசிகள், மரப்பாசிகள், குள்ளமான வில்லோ மரங்கள் | பைன், பின், தேவதாரு, ஸ்புருஸ் |
| 3. | **விலங்குகள்** | ஆர்க்டிக் நரி, கலைமான், கஸ்தூரி எருது, பனிக்கரடி, வால்வரின், சாபில் மற்றும் நீல நரி. | நீர்நாய், நரி, வெள்ளை கீரி, ஸ்கங்க் , கலைமான், கடமான், காட்டுமான், கருப்பு கரடிகள், கிரிஸ்லி கரடிகள் |

VI. **கீழ்கண்ட வாக்கியங்களில் பொருத்தமானதை டிக் செய்யவும்**

1. **கூற்று** (A) : வட அமெரிக்காவின் தெற்கு மற்றும் மேற்கு மாநிலங்களில் பருத்தி நன்றாக வளருகிறது.
**காரணம்** (R) : மழையுடன் கூடிய வெப்பமான கோடைகாலம் மற்றும் வளமான மண் ஆகியவை பருத்தி விளைவதற்கான ஏற்ற சூழல்களாக உள்ளன.

அ) கூற்றும் காரணமும் சரி.
ஆ) கூற்று சரி. காரணம் தவறு.
இ) காரணம் தவறு. கூற்று சரி.
ஈ) காரணம் மற்றும் கூற்று தவறு.

2. **கூற்று:** தென் அமெரிக்காவில் உள்ள தொழிற்சாலைகள் வேகமாக வளர்ச்சி அடைந்துள்ளன.
**காரணம்:** தொழில்மயமாவதற்கான அடிப்படை வசதிகள் குறிப்பாக போக்குவரத்து வளர்ச்சியில் பின்தங்கியுள்ளது.

அ) கூற்றும் காரணமும் சரி.
ஆ) கூற்று சரி. காரணம் தவறு.
இ) காரணம் தவறு. கூற்று சரி.
ஈ) காரணம் மற்றும் கூற்று தவறு.

**விடைகள்: 1. அ) கூற்றும் காரணமும் சரி. 2. ஈ) காரணம் மற்றும் கூற்று தவறு.**

VII. **கீழ்கண்டவற்றிற்கு சுருக்கமாக விடையளிக்கவும்.**

**1. வட அமெரிக்காவின் எல்லைகளை கூறுக.**

- மேற்கில் பசிபிக் பெருங்கடல்,
- கிழக்கில் அட்லாண்டிக் பெருங்கடல்,
- வடக்கில் ஆர்க்டிக் பெருங்கடல்,
- தெற்கில் தென் அமெரிக்கா.

**2. மெக்கன்சி ஆறு பற்றி குறிப்பு வரைக.**

- வட அமெரிக்காவின் இரண்டாவது மிகப்பெரிய ஆற்றுப்படுகையாக இருப்பது மெக்கன்ஸி ஆறு.
- இது கிரேட் ஸ்லேவ் ஏரியில் ஆரம்பித்து ஆர்க்டிக் பெருங்கடலில் கலக்கிறது.

**3. வட அமெரிக்காவில் விளையும் பழங்களின் வகைகள் யாவை ? அவற்றில் சில பழங்களைப் பட்டியலிடுக.**

- வட அமெரிக்காவில் சிட்ரஸ் வகை பழங்கள் வளர்க்கப்படுகின்றன.
- கிரான்பெரீஸ், ப்ளூபெர்ரி, கான்கார்ட் திராட்சைகள், ஸ்ட்ராபெரி, நெல்லிக்கனி மற்றும் பிற பழவகைகள், முக்கிய பழங்களாக விளைவிக்கப்படுகின்றன.

**4. எஸ்கிமோவின் வாழ்க்கை முறை பற்றி குறிப்பு வரைக.**

- கடும் குளிர் மற்றும் வாழ்வதற்கு கடினமான பகுதிகளில் எங்கு மீன்கள் அதிகம் கிடைக்கிறதோ, அங்கு வாழ்கிறார்கள்.
- சுற்றுச்சூழலை பெரிதும் மாற்றி அமைக்க இயலாத நிலையில் இவர்கள் எளிய வாழ்க்கையை வாழ்கிறார்கள்.
- பனிக்கட்டிகளை கொண்டு இவர்கள் கட்டும் வீடுகளுக்கு இ◌ஃக்லூ என்று பெயர்.

**5. வட அமெரிக்காவில் அதிக மக்கள்தொகை கொண்ட பகுதிகள் யாவை?**

- வட அமெரிக்காவின் கிழக்குப் பகுதிகள், கிரேட் ஏரி பகுதி, மெக்ஸிகோ மற்றும் மத்திய அமெரிக்காவில் மக்கள் அடர்த்தி அதிகமாக காணப்படுகிறது

**6. தென் அமெரிக்காவின் இயற்கை பிரிவுகளை எழுதுக.**

- ஆன்டஸ் மலைத்தொடர்
- ஆற்றுப்படுகை அல்லது மத்திய சமவெளிகள்
- கிழக்கு உயர்நிலங்கள்.

**7. 4 மணி 'கடிகார மழை' என்றால் என்ன?**

- பூமத்தியரேகை பகுதிகளில் வெப்பச்சலன மழை கிட்டத்தட்ட தினமும் பிற்பகலில் நிகழ்கிறது.
- இது பொதுவாக மாலை 4 மணிக்கு நிகழ்கிறது, அதனால்தான் இது 4 மணி 'கடிகார மழை' என்று அழைக்கப்படுகிறது.

**8. தென் அமெரிக்காவில் உள்ள வெப்ப மண்டலக் காடுகளில் வாழும் தாவரங்கள் மற்றும் விலங்குகளை பட்டியலிடுக.**

**தாவரங்கள்**

- ரப்பர் , சீமைத்தேக்கு, கருங்காலி, லாக் வுட், பிரேசில் கொட்டை மற்றும் சிபா..

**விலங்குகள்**

- அனகோண்டா, ஆர்மாடில்லோஸ், பிரன்ஹா, குரங்கு, பாம்பு, முதலை மற்றும் கிளிகள்.

**9. எஸ்டான்சிய என்றால் என்ன?**

- கால்நடைகள் வளரும் பெரும் புல்வெளி பரப்புகள் எஸ்ட்டென்ஷன் என அழைக்கப்படுகின்றன. இவை சிறிய புல்வெளி தளங்களாக பிரிக்கப்படுகின்றன.
- இவை மேலும் பராமரிப்பு தளங்களாக பிரிக்கப்பட்டு இங்கு கால்நடைகள் தரம் பிரித்து முத்திரை இடப்படுகின்றன.
- 'எஸ்டான்சியாரே ' எனப்படும் எஸ்டான்சியா பராமரிப்பாளரின் கீழ் 'கவ்சோ ' எனப்படும் வேலையாட்கள் வேலை செய்கின்றனர்.

**10. தென் அமெரிக்காவின் முக்கிய ஏற்றுமதிகளை கூறுக.**

- சர்க்கரை, காபி, கொக்கோ, புகையிலை, மாட்டிறைச்சி, சோளம், கோதுமை, பெட்ரோலியம், இயற்கை எரிவாயு, ஆளி விதை (Linseed), பருத்தி, இரும்புத்தாது மற்றும் தாமிரம்

**VIII. பத்தியளவில் விடையளி.**

**1. வட அமெரிக்காவின் காலநிலை பற்றி விளக்குக.**

- அட்சக்கோடுகளின் அடிப்படையில் வெப்பமண்டல பகுதி முதல் துந்திர பகுதி வரை பரவியுள்ள வட அமெரிக்கக் கண்டத்தில் பல தரப்பட்ட காலநிலைகள் காணப்படுகின்றன.
- மத்திய சமவெளிகளில் ஊடுருவும் குளிர் காற்றினால் வட அமெரிக்காவில் நீண்ட கடுங்குளிர்காலமும் குறுகிய வெப்பமான கோடைக்காலமும் காணப்படுகிறது.
- சூறாவளி புயல்களினால் இங்கு மழைப் பொழிவு உண்டாகிறது.
- ஆர்டிக் பகுதி குளிர்ந்தும் வறண்டும் காணப்படுகிறது.
- மத்திய சமவெளிகளில் உறை பனியோடு கூடிய குளிர்காலமும் வெப்ப மண்டலம் போன்ற அதிக வெப்பமுடைய கோடை காலமும் காணப்படுகின்றது.
- வட அமெரிக்கக் கண்டத்தின் தெற்குப்பகுதியில் பெரும்பாலும் ஆண்டு முழுவதும் வெப்பமான காலநிலையே நிலவி வருகிறது.
- மிஸிஸிப்பி மிஸ்சௌரி ஆறுகளின் முகத்துவார பகுதிகளும் வளைகுடா கடற்கரை பகுதிகளும் கோடை காலங்களில் வீசும் வடகிழக்கு பருவக்காற்றினால் கோடை மழையைப் பெறுகின்றன.
- சூடான ஈரப்பதம் மிகுந்த தென்மேற்குப் பருவக் காற்றுகள் வட அமெரிக்காவின் வட மேற்குப் பகுதிகளுக்கு மழை பொழிவை தருவதோடு இல்லாமல் அப்பகுதி வெப்பமாக இருக்கவும் உதவுகிறது.
- வடமேற்கு கடற்கரை பகுதியில் நகரும் அலாஸ்கா வெப்ப நீரோட்டம் அப்பகுதியில் பனி உறையாமல் இருப்பதற்கு காரணமாகிறது.

- ஈரப்பதம் மிக்க குளிர் காலத்தையும் வறண்ட கோடை காலத்தையும் உள்ளடக்கிய மத்திய தரைக்கடல் காலநிலை அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் காணப்படுகிறது.

**2. வட அமெரிக்காவின் கனரக பொறியியல் தொழிற்சாலை பற்றி எழுதுக.**

- கனமான மற்றும் பருமனான மூலப் பொருட்களைக் கொண்டு பெருமளவிலான எரிபொருள், மூலதனம் மற்றும் போக்குவரத்து செலவினங்களை பயன்படுத்தி பொருட்களை தயாரிக்கும் தொழிற்சாலைகளை கனரக பொறியியல் தொழிற்சாலைகள் என அழைக்கப்படுகின்றன.
- ஐக்கிய அமெரிக்க நாடுகள் ஆட்டோமொபைல் உற்பத்தியில் மிகப்பெரிய நாடாக விளங்குகிறது.
- வட அமெரிக்காவின் டெட்ராய்ட், சிக்காகோ, ப∴பலோ , இண்டியானா போலிஸ், லாஸ் ஏஞ்சல்ஸ், செயின்ட் லூயிஸ், பிலடெல்பியா, நியூயார்க் , பால்டிமோர் மற்றும் அட்லாண்டா ஆகியவையும், கனடாவின் வின்ஸரும் முக்கிய கனரக தொழில் மையங்களாக திகழ்கின்றன.

**3. தென் அமெரிக்காவின் ஆறுகள் பற்றி விவரிக்கவும்.**


- ஆன்டஸ் மலைத்தொடரின் அமைவு காரணமாக இக்கண்டத்தின் முக்கிய ஆறுகள் அனைத்தும் அட்லாண்டிக் பெருங்கடலில் கலக்கின்றன.
- குறுகிய மற்றும் விரைவான ஆறுகள் பசிபிக் பெருங்கடலில் கலக்கின்றன.
- பெரு நாட்டின் கடற்கரையோரத்திலுள்ள சில ஆறுகள் நீர் பாசனத்திற்கும். நீர் மின்சாரம் தயாரிப்பிற்கும் பயன்படுத்தப்படுகின்றன.
- தென் அமெரிக்காவின் மிக நீண்ட ஆறு அமேசான் ஆறு (6,450 கிலோ மீட்டர் ) ஆகும்.
- இது உலகின் மிகப்பெரிய நதியமைப்பு ஆகும்.
- அமேசான் ஆறு ஆயிரக்கணக்கான கிளை நதிகளை கொண்டது.
- ஒரினாகோ, பரானா மற்றும் உருகுவே ஆறுகள் பிற முக்கிய நதிகள் ஆகும்.
- கடலில் சேரும் இடத்தில் இருந்து உள் நோக்கி குறிப்பிட்ட தூரம் வரை அனைத்து ஆறுகளும் போக்குவரத்திற்கு பயன்படுத்தக் கூடிய வகையில் உள்ளன.

**4. தென் அமெரிக்காவில் உள்ள பல்வேறு முக்கிய இனங்கள் பற்றி எழுதுக.**


- உலகின் பலதரப்பட்ட கலவையான மக்கள்தொகையை கொண்டது தென் அமெரிக்கா.
- தென் அமெரிக்காவின் பெரும்பாலான மக்கள் பதினைந்தாம் நூற்றாண்டில் வருகை புரிந்த ஐரோப்பியர்களான ஸ்பானியர் மற்றும் போர்ச்சுக்கீசியரின் வம்சாவளியினர் ஆவர்.
- ஐரோப்பியர்கள் ஆப்பிரிக்கர்களை அடிமைகளாக கொண்டு வந்ததன் விளைவாக ஆப்பிரிக்க வம்சாவளியினரும் இங்கு இருக்கின்றனர்.
- பூர்வகுடி மக்கள் இன்றும் மலைகளிலும் மழைக்காடுகளிலும் அவர்களது சொந்த மொழி மற்றும் கலாச்சாரத்தோடு வாழ்ந்து வருகின்றனர்.
- அமெரிக்க இந்தியர்கள், ஐரோப்பியர்கள் மற்றும் கருப்பர் என மூன்று முக்கிய இனங்கள் தென் அமெரிக்காவில் காணப்படுகின்றன.
- பூர்வ குடிமக்கள் மற்றும் ஐரோப்பியர்களின் கலப்பினம் "மெஸ்டிஜோ" என அழைக்கப்படுகின்றது.
- ஐரோப்பியர்கள் மற்றும் கருப்பர்களின் கலப்பினம் முலாடோ என அழைக்கப்படுகிறது.
- பூர்வ குடிமக்கள் மற்றும் கருப்பர்களின் கலப்பினம் ஸாம்போ என அழைக்கப்படுகின்றது.

IX. வரைபட திறன்.

1. பாடப்புத்தகம் மற்றும் நிலவரை படம் உதவிக்கொண்டு வட அமெரிக்காவை சுற்றியுள்ள கடல்கள், வளை குடாக்கள் மற்றும் விரிகுடாகளை வரைபடத்தில் குறிக்கவும்.




2. கொடுக்கப்பட்டுள்ள தென் அமெரிக்க வரைபடத்தில் அமேசான், ஒரினாகோ ,நீக்ரோ, பராகுவே , உருகுவே ஆறுகளை குறிக்கவும்.



TNPSCJOB

## அலகு - 2

# நிலவரைபடத்தை கற்றறிதல்



**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. நிலவரைபடம் உருவாக்குதலின் அறிவியல் பிரிவு என அழைக்கப்படுகிறது______
   அ) புவியியல் (ஜியோகிராஃபி) ஆ) கார்டோகிராஃப்ட்
   இ) பிஸியோகிராபி ஈ) பௌதீக புவியியல்

2. வடக்கு, தெற்கு, கிழக்கு மற்றும் மேற்கு ஆகிய நான்கும் ________ திசைகள் ஆகும்.
   அ) முக்கியமான ஆ) புவியியல் இ) அட்சரேகை ஈ) கோணங்கள்

3. கலாச்சார நிலவரைபடங்கள் என்பன ___________ அமைப்புகளைக் காட்டுகின்றன.
   அ) இயற்கையான ஆ) மனிதனால் உருவாக்கப்பட்ட
   இ) செயற்கையான ஈ) சுற்றுச்சூழல்

**விடைகள்: 1. ஆ) கார்டோகிராஃப்ட் 2. அ) முக்கியமான 3. ஆ) மனிதனால் உருவாக்கப்பட்ட**

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. புவியியலாளர்களின் ஒரு முக்கிய கருவியாக ________ அமைகிறது.
2. முதன்மை திசைகளுக்கு இடையே உள்ள திசைகள் இடைநிலை ________ எனப்படும்.
3. நிலவரைபடத்தில் உள்ள ________ வரைபடத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள வண்ணங்கள் மற்றும் சின்னங்களை விளக்குகிறது.
4. காடாஸ்ட்ரல் நிலவரைபடங்கள் ________ என அழைக்கப்படுகின்றன
5. சிறிய அளவை நிலவரைபடங்கள் ________ மற்றும் ________ போன்ற அதிக பரப்பளவு இடங்களைக் காட்ட உதவுகின்றன.

**விடைகள்: 1. நிலவரைபடம் 2. திசைகள் 3. குறிப்புகள்
4. கிராமம் மற்றும் நகர்ப்புறங்களின் வரைபடம் 5. கண்டங்கள் மற்றும் நாடுகள்**

**III. பொருந்தாதவற்றை வட்டமிட்டுக் காட்டுக.**

1. வடகிழக்கு, அளவை, வடமேற்கு மற்றும் கிழக்கு.
2. வெண்மை, பனி, உயர்நிலம் மற்றும் சமவெளி.
3. நில அமைப்பு நிலவரைபடம், மண் நிலவரைபடம், இயற்கை அமைப்பு நிலவரைபடம் மற்றும் நிலவரைபடநூல்.
4. வானிலை முன்னறிவிப்பு, காலநிலை, மழைவீழ்ச்சி மற்றும் வெப்பநிலை.

**விடைகள்: 1. அளவை 2. சமவெளி. 3. நிலவரைபடநூல். 4. காலநிலை**

**IV. பொருத்துக.**

| | | |
|---|---|---|
| 1. மேல் வலது மூலை | - | அடர்த்தி மற்றும் வளர்ச்சி |
| 2. குறிப்பு | - | மாவட்டம் அல்லது நகரம் |
| 3. பெரிய அளவை நிலவரைபடம் | - | இயற்கை நில அமைப்பு |
| 4. இயற்கை அமைப்பு வரைபடம் | - | வண்ணங்கள் மற்றும் சின்னங்கள் |
| 5. மக்கள் தொகை வரைபடம் | - | 'N' எழுத்து |

**விடைகள்: 1.'N' எழுத்து 2. வண்ணங்கள் மற்றும் சின்னங்கள் 3. மாவட்டம் அல்லது நகரம்
4. இயற்கை நில அமைப்பு 5. அடர்த்தி மற்றும் வளர்ச்சி**

**V. பின்வரும் கூற்றுகளை ஆய்வு செய்க.**

1\. i. நிலவரைபட நூல் என்பது பல வகைப்பட்ட நிலவரைபடங்கள் கட்டமைக்கப்பட்ட தொகுதி ஆகும்.

ii. நிலவரைபட நூலின் வரைபடங்கள் சிறிய அளவையில் வரையப்படுகின்றன.

iii. முக்கியமற்ற விவரங்கள் தவிர்க்கப்பட்டுள்ளன .

அ) i மற்றும் iii சரி ஆ) ii மற்றும் iii சரி இ) i மற்றும் ii சரி ஈ) i, ii மற்றும் iii சரி

2\. **கூற்று** 1 : உலக உருண்டை என்பது புவியின் முப்பரிமாண மாதிரி.

**கூற்று 2:** இதனை இது கையாள்வதற்கும், எடுத்துச் செல்வதற்கும் எளிது. சுருட்டியோ அல்லது மடித்தோ கையில் எடுத்துச் செல்வதற்கும் எளிது.

அ) கூற்று 1 சரி, 2 தவறு ஆ) கூற்று 1 தவறு, 2 சரி

இ) இரண்டும் சரி ஈ) இரண்டும் தவறு

**விடைகள்: 1. ஈ) i, ii மற்றும் iii சரி 2. அ) கூற்று 1 சரி, 2 தவறு**

**VI. பின்வருவனவற்றிற்கு பெயரிடுக.**

1. தட்டையான பரப்பில் பூமியைக் குறிப்பது.
2. நிலவரைபடத்தில் உள்ள தூரத்திற்கும் நிலத்தில் உள்ள தூரத்திற்கும் உள்ள விகிதம்.
3. தரைவழி மற்றும் சாலை வழி போக்குவரத்தினைக் காட்ட உதவும் குறியீடு.
4. வேறுபட்ட நிலவரைபடங்களை உள்ளடங்கிய புத்தகம்.
5. நிர்வாகப் பிரிவுகளைக் காட்டும் நிலவரைபடம்.

**விடைகள்: 1. நிலவரைபடங்கள் 2. அளவை 3. சாலை வழி - இரயில் வழி 4. நில வரைபட நூல் 5. அரசியல் நிலவரைப்படம்**

**VII. பின்வருவனவற்றிற்கு விடையளிக்க.**

**1. நிலவரைபடம் என்றால் என்ன?**

- நிலவரைபடம் என்பது புவியின் முழு பகுதி அல்லது ஒரு பகுதியின் காட்சியினை ஒரு தட்டையான மேற்பரப்பில் கொடுக்கப்பட்டுள்ள அளவையில் வரையப்படுவதாகும்.

**2. கார்டோகிராஃபி என்றால் என்ன?**

- நிலவரைபடத்தை உருவாக்கும் அறிவியல் என்பது கார்ட்டோகிராஃபி என அழைக்கப்படுகிறது.
- கார்டே(Carte) என்பது நிலவரைபடம் கிராபிக்(graphic) என்பது வரைதல்.
- நிலவரைபடத்தை வரைந்து உருவாக்குபவர் கார்டோகிராஃபர் (Cartographer) ஆவர்.

**3. முதன்மை திசைகள் யாவை?**

- கிழக்கு, மேற்கு, வடக்கு மற்றும் தெற்கு

**4. நிலவரைபட நூல் என்பது என்ன?**

- நிலவரைபட நூல் என்பது பல வகையான நிலவரைபடங்களின் தொகுப்பு புத்தகம் ஆகும்.
- அதிக பரப்பின் புவியியல் கூறுகள் குறித்து அறிந்துகொள்ள நிலவரைபட நூல் உதவுகிறது.

**5. நிலவரைபட நூலின் வகைகளைக் குறிப்பிடுக.**

- பள்ளி நிலவரைபட நூல்
- மேம்படுத்தப்பட்ட நிலவரைபட நூல்
- பிராந்திய நிலவரைபட நூல்
- தேசிய நிலவரைபட நூல்

**6. நிலவரைபடத்தின் பயன்கள் யாவை?**

- ஒரு இடத்தினை நேரில் சென்று பார்க்காமல் நிலத்தோற்றம் மற்றும் நில அமைப்புகளின் விளக்கங்களைத் தெரிந்து கொள்ள உதவுகிறது.

- நிலவரைபடங்கள் இராணுவத்தின் திட்டமிடல் பணியில் மகத்தான செயல்களுக்கு முக்கியத்துவம் பெறுகிறது.
- விமானங்கள் குறிப்பிட்ட இடத்தை சேரவும், கப்பல் கடலில் பாதுகாப்பாக செல்லவும் உதவுகின்றது.
- நிலவரைபடங்கள் வானிலை முன்னறிவிப்பிற்கு பயன்படுகிறது.

VIII. **விரிவான விடையளிக்க.**

**1. நில வரைபடத்தின் முக்கிய கூறுகள் யாவை? அவற்றைப் பற்றி எழுதுக?**

**நில வரைபடத்தின் கூறுகள்**

- தலைப்பு, திசை, அளவை, குறிப்பு  அல்லது சின்னங்களின் விளக்கங்கள்

**தலைப்பு**

- நிலவரைபடத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்களை விவரிக்கும் தலைப்பினை ஒவ்வொரு நிலவரைபடமும் கொண்டிருக்கும்.

**திசைகள்**

- பொதுவாக வரைபடங்கள் வடக்கு நோக்கிய நிலையில் வரையப்படுகிறது.
- நிலவரைபடத்தில் மற்ற திசைகளான கிழக்கு, மேற்கு, மற்றும் தெற்கு திசையை கண்ட றிய உதவுகிறது.

**அளவை**

- நிலவரைபடத்தின் அளவை என்பது நிலவரைபடத்தில் இரண்டு இடங்களுக்கிடையே உள்ள தூரத்திற்கும் நிலத்தில் அதே இரண்டு இடங்களுக்கிடையேயுள்ள தூரத்திற்கும் உள்ள விகிதம் ஆகும்.

**குறிப்பு**

- குறிப்பு என்பது நிலவரைபடத்தில் வேறுபட்ட இயற்கை மற்றும் கலாச்சார அம்சங்களைக் காட்ட பயன்படுத்தப்பட்ட சின்னங்கள் மற்றும் குறியீடுகளைக் குறித்து விளக்குவதாகும்.

**2. நில வரைபடத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் மூன்று வழிகள் யாவை?**

- நிலவரைபடத்தினை வாசித்தல் என்பது புவியியல் ரீதியான இருப்பிடம், இயற்கை அமைப்புகளான மலைகள், பீடபூமிகள் மற்றும் சமவெளிகள் குறித்தும், நீர்நிலைகளான ஆறு, ஏரி, கடல் குறித்தும், கலாச்சார அமைப்புகளான சாலைகள் மற்றும் குடியிருப்புகள் குறித்தும், புரிந்து கொள்ள வழிவகுக்கின்றது.
- நிலவரைபடங்களானவை கடந்த காலத்தினைப் பதிவு செய்தலாக இருக்க வேண்டும்.
- இவை கடந்த காலத்தினைப் புரிந்து கொள்ளவும் எதிர்காலத்தினை உணரவும் வழிவகை செய்யவேண்டும்.

**3. கருத்தின் அடிப்படையில் வரைபடத்தை வகைப்படுத்தவும்?**

- **நிலத்தோற்ற வரைபடம் -** மலைகள், பள்ளத்தாக்குகள், சமவெளிகள், பீடபூமிகள் மற்றும் நதிகள்
- **புவியியல் வரைபடம் -** புவியியல் கட்டமைப்புகள், பாறைகள் மற்றும் தாதுக்கள்
- **காலநிலை வரைப்படங்கள்** வெப்ப நிலை பரவல், மழையளவு, மேக மூட்டம் ஒப்பு ஈரப்பதம், காற்று வீசும் திசை, வேகம் மற்றும் சில வானிலை கூறுகள்
- **மண் நிலவரைபடங்கள் -** வெவ்வேறு வகையான மண் மற்றும் அதன் பண்புகள்
- **கலாச்சார நிலவரைபடங்கள் -** மனிதனால் உருவாக்கப்பட்ட அமைப்புகளைக் காட்டுவது
- **அரசியல் நிலவரைபடங்கள் -** ஒரு நாட்டின் மாநிலம் அல்லது மாவட்டத்தின் நிர்வாக பிரிவுகளைக் காட்டுவதாகும்.
- **மக்கள் தொகை நிலவரைபடங்கள் -** மக்கள் தொகை பரவல், அடர்த்தி மற்றும் வளர்ச்சி, வேலைவாய்ப்பு அமைப்பு

- **பொருளாதார நிலவரைபடங்கள்** - வெவ்வேறு வகைப்பட்ட பயிர்வகைகள், தாதுக்கள், தொழிற்சாலை அமைவிடங்கள், வாணிப வழிகள்.
- **போக்குவரத்து நிலவரைபடங்கள்** - சாலைகள், இருப்புபாதை , இரயில்வே நிலையம், விமான நிலையம், துறைமுகம் வழிகள்
- **கருத்து நிலவரைபடங்கள்** - ஒரு குறிப்பிட்ட அம்சம் அல்லது கருத்தின் பரவலைக் கொண்டும், இடத்திற்கு இடம் மாறுபடுதலைக் குறித்தும் குறிப்பிடுகின்றன.

**4. நில வரைபடம் மற்றும் புவி மாதிரிகளை வேறுபடுத்தி எழுதுக?**

| | நில வரைபடம் | புவி மாதிரி |
|---|---|---|
| 1 | நிலவரைபடம் என்பது புவியின் இரு பரிமாண அமைப்பு. | புவி மாதிரி என்பது புவியின் முப்பரிமாண அமைப்பு. |
| 2 | சிறிய மற்றும் பெரிய பரப்பளவைக் காட்டுகிறது. | புவியின் மாதிரி அமைப்பு |
| 3 | ஒரு இடத்தின் அதிகப்படியான தகவல்களை நிலவரைபடம் வழங்க இயலும்.. | ஒரு இடத்தின் அதிகப்படியான தகவல்களை நிலவரைபடம் வழங்க இயலாது |
| 4 | நிலவரைபடமானது கையில் எடுத்துச் செல்ல ஏதுவானது. | புவிமாதிரியினை கையில் எடுத்துச் செல்ல இயலாது. |

**5. அளவையின் அடிப்படையில் நிலவரைபடத்தின் வகைகளை விரிவாக எழுது?**

**A. பெரிய அளவை வரைபடங்கள்:**

பெரிய அளவை நிலைவரைபடம்: குறைந்த பரப்பளவிலான இடங்களைக் குறித்து அதிக விவரங்களைக் கொடுக்கக் கூடியது பெரிய அளவை நிலவரைபடம் ஆகும். ஏனெனில் அவை ஒப்பீட்டளவில் பெரிய பகுதிகளில் வரையப்படுகிறது.

i). **நிலஅளவைப் படங்கள்** (Cadastral)

- கிராமம் மற்றும் நகர்ப்புறங்களின் வரைபடமாகும்.

ii). **தல வரைபடம்** (Topographical)

- சிறிய பரப்பளவு குறித்து அதிக விவரங்களைத் தருவனவாகும். இவை இந்தியாவின் நில ஆய்வு மையத்தால் (சர்வே ஆப் இந்தியா) தயாரிக்கப்படுகிறது.
- இயற்கை அமைப்புக்கள், மனிதனால் உருவாக்கப்பட்ட கட்டடங்கள், சாலைகள், மற்றும் கால்வாய்களை குறித்தும் விளக்குகின்றன.

**B. சிறிய அளவை வரைபடங்கள்:**

கண்டங்கள் அல்லது நாடுகள் போன்ற பெரிய அளவிலான பகுதிகளை சிறிய அளவுகளைக் கொண்டு வரையப்படும் வரைபடம் சிறிய அளவு வரைபடமாகும். இவ்வகை வரைபடம் 1 செ.மீ = 1000 கி.மீ. ஆகும்.

i). **சுவர் வரைபடங்கள்**

- அதிக பரப்பளவை காட்டும் சிறிய அளவை படங்களாகும். இவை வகுப்பறையில் மணவர்களுக்கும் மற்றும் அலுவலகங்களிலும் பயன்படுகிறது.
- அதிக பரப்பளவிலான இடங்களுக்கு குறைந்த அளவு விவரங்களைக் கொடுக்கக் கூடியது.

ii). **நிலவரைபட நூல்**

- பல வகையான நிலவரைபடங்களின் தொகுப்பு புத்தகம் ஆகும். இவை அதிக பரப்பளவிலான கண்டங்கள் மற்றும் நாடுகளைக் காட்டும் சிறிய அளவை வரைபடங்களைக் கொண்டது.
- மலைகள், பிரதான சாலைகள், இரயில்பாதைகள் மற்றும் முக்கிய நகரங்களை நிலவரைபட நூல் வரைபடங்களில் முதன்மையாகக் காட்டப்படுகின்றன.

**IX. உயர் சிந்தனை வினா.**

**1. பயணிகளின் முதன்மை கருவி நிலவரைபடம் ஏன்?**

- நிலவரைபடம் ஒரு பயணிக்கு இன்றியமையாத கருவியாகும்.
- இது ஒரு பயணிக்கு திசையைக் கண்டறிய உதவுகிறது.
- இது ஒரு இடத்தின் அட்சரேகை மற்றும் நீளமான அளவைப் பற்றியும் கூறுகிறது.
- ஒரு இடத்தை எளிதில் கண்டுபிடித்து சரியான பயண வழியைப் பின்பற்ற இது ஒருவருக்கு உதவுகிறது.

## அலகு - 3

# இயற்கை இடர்கள் - பேரிடர் மேலாண்மை



**I. சரியான விடையைத் தெரிவு செய்க.**

1. பொருட்சேதம், உயிரிழப்பு மற்றும் சுற்றுச்சூழலில் பெரிய மாற்றத்தை நிகழ்த்தும் ஒரு இயற்கைக் காரணி ___________.

அ) இடர் ஆ) பேரிடர் இ) மீட்பு ஈ) மட்டுப்படுத்தல்

2. பேரிடரின் விளைவைக் குறைக்கும் செயல்பாடுகள்.

அ) தயார் நிலை ஆ) பதில் இ) மட்டுப்படுத்தல் ஈ) மீட்பு நிலை

3. ஒரு திடீர் நகர்வு அல்லது புவி மேலோட்டின் திடீர் நடுக்கம் ___________ என அழைக்கப்படுகிறது.

அ) சுனாமி ஆ) புவி அதிர்ச்சி இ) நெருப்பு ஈ) சூறாவளி

4. கன மழையினால் திடீரென அதிக நீர் வெளியேறுதல் ___________ என அழைக்கப்படுகிறது.

அ) வெள்ளம் ஆ) சூறாவளி இ) வறட்சி ஈ) ப ருவகாலங்கள்

5. ___________ வைத்துள்ளோரை வாகனம் ஓட்ட அனுமதித்தால் சாலை விபத்தினைத் தவிர்க்கலாம்.

அ) ரேஷன் அட்டை ஆ) ஓட்டுநர் உரிமம் இ) அனுமதி ஈ) ஆவணங்கள்

**விடைகள்: 1. அ) மற்றும் ஆ) 2. இ) மட்டுப்படுத்தல் 3. ஆ) புவி அதிர்ச்சி 4. அ) வெள்ளம் 5. ஆ) ஓட்டுநர் உரிமம்**

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. மனிதனுக்கும், அவனுடைய உடமைகளுக்கும் பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய நிகழ்வு ______.
2. பேரிடரின் போது எடுக்கப்படும் நடவடிக்கைகள் __________என அழைக்கப்படுகிறது.
3. மிகப்பெரிய அழிவு ஏற்படுத்தும் அலைகளை ஏற்படுத்தும் நீரின் இடப்பெயர்வு _________ எனப்படும்.
4. தீ விபத்து ஏற்பட்டால் அழைக்க வேண்டிய எண் ___________.
5. இயற்கை மற்றும் மனிதனால் உருவாக்கக் கூடிய பேரிடரின் போது மனித வாழ்க்கை மற்றும் உடைமைகளை _________ பேரிடர் மேலாண்மை எனப்படுகிறது.

**விடைகள்: 1. இடர் 2. பேரிடர் மேலாண்மை 3. சுனாமி 4. 101 5. பாதுகாப்பது**

**III. பொருத்துக.**

1. புவிஅதிர்ச்சி - இராட்சத அலைகள்
2. சூறாவளி - பிளவு
3. சுனாமி - சமமற்ற மழை
4. தொழிற்சாலை விபத்து - புயலின் கண்
5. வறட்சி - கவனமின்மை

**விடைகள்: 1. பிளவு 2. புயலின் கண் 3. இராட்சத அலைகள் 4. கவனமின்மை 5. சமமற்ற மழை**

**IV. பின்வரும் வாக்கியங்களை கருத்திற் கொண்டு சரியான விடையை செய்க.**

1. **கூற்று** (A): நவீன உலகத்தில் அனுதினமும் மகிழ்ச்சியாக வாழ முடியாது

**காரணம்** (R): மாசடைதல் மற்றும் சுற்றுச்சூழல் சீரழிவின் காரணமாக இயற்கை இடை மற்றும் பேரிடரை சந்தித்துக் கொண்டிருக்கிறோம்.

அ) கூற்று மற்றும் காரணம் சரி; கூற்று காரணத்தை விளக்குகிறது.

ஆ) கூற்று மற்றும் காரணம் சரி; கூற்று காரணாத்தை விளக்கவில்லை

இ) கூற்று தவறு; காரணம் சரி.

ஈ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு.

2. **கூற்று** (A) : திடீர் நுகர்வு அல்லது பூமியின் மேலேட்டில் ஏற்படும் நடுக்கம் புவி அதிர்ச்சி ஆகும்.

**காரணம்** (R): டெக்டானிக் தட்டுகளின் நகர்வு, ஜனநெருக்கடி, பிளவு போன்றவை புவி அதிர்ச்சிக்கு வித்திடுகின்றன

அ) கூற்று மற்றும் காரணம் சரி மற்றும் கூற்று காரணத்தை விளக்குகிறது.

ஆ) கூற்று மற்றும் காரணம் சரி; கூற்று காரணாத்தை விளக்கவில்லை

இ) கூற்று தவறு; காரணம் சரி.

ஈ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு.

**விடைகள்: 1. ஆ) கூற்று மற்றும் காரணம் சரி; கூற்று காரணாத்தை விளக்கவில்லை**
**2. ஆ) கூற்று மற்றும் காரணம் சரி; கூற்று காரணாத்தை விளக்கவில்லை**

**V. சுருக்கமாக விடையளிக்க.**

**1. இடர் வரையறு:**

- பொதுவாக இடர் என்பது ஒரு ஆபத்தான நிகழ்வு, மனித செயல்பாடு அல்லது வாழ்க்கையில் இழப்பை ஏற்படுத்தும் நிலை, காயம், பொருட்சேதம், சொத்துக்கள் சேதமடைதல், வேலையிழப்பு, சுகாதார பாதிப்புகள், வாழ்வாதார இழப்பு, சமூக, பொருளாதார இடையூறு மற்றும் சுற்றுச்சூழல் சேதம் போன்றவையாகும்.

**2. பேரிடர் என்றால் என்ன?**

- ஒரு பேரிடர் என்பது பொதுவாக "சமூகத்தில் ஒரு கடுமையான இடையூறு, பரவலான பொருள், பொருளாதார, சமூக அல்லது சுற்றுச்சூழல் இழப்புகளை ஏற்படுத்துகிறது.
- இது பாதிக்கப்பட்ட சமூகத்தின் சொந்த வளங்களைப் பயன்படுத்தி சமாளிக்கும் திறனை மீறுகிறது".

**3. பேரிடர் மேலாண்மை சுழற்சியின் ஆறு நிலைகள் யவை?**

| பேரிடருக்கு முன் ஆபத்தைக் குறைத்தல் நிலை | பேரிடருக்குப் பின் மீட்டெடுத்தல் நிலை |
|---|---|
| ➢ தயார் நிலை<br>➢ மட்டுப்படுத்துதல்<br>➢ கட்டுப்படுத்துதல் | ➢ துலங்கல்<br>➢ மீட்டல்<br>➢ முன்னேற்றம் |

**4. தமிழ்நாட்டில் உள்ள எச்சரிக்கை அமைப்பு சார்ந்த இரண்டு நிறுவனங்கள் எவை?**

- தமிழ்நாடு பேரிடர் மறுமொழி படை (SDRF)
- மாவட்ட பேரிடர் மேலாண்மை ஆணையம் (DDMA)

**5. வெள்ளத்தினால் ஏற்படும் மூன்று விளைவுகள் பற்றி எழுதுக.**

- சொத்து மற்றும் உயிரிழப்பு
- மக்கள் இடப்பெயர்வு
- காலரா மற்றும் மலேரியா போன்ற தொற்று நோய்கள் பரவுதல்.

**6. இரயில் நிலையத்தில் பின்பற்றப்பட வேண்டிய நான்கு நடவடிக்கைகள் குறித்து எழுதுக.**

- இரயில் பாதுகாப்பு ஆலோசனைகளை தெரிந்து கொண்டு அதன்படி பின்பற்ற வேண்டும். இரயில் எந்த நேரமும், எந்த திசையிலும் வரக்கூடும்.
- இரயில் நிலைய மேடையின் ஓரங்களில் அமரக்கூடாது.
- தண்டவாளங்களைக் கடந்து செல்ல கூடாது.
- நடைமேடையை பயன்படுத்தவும்.

**7. தொழிற்சாலை விபத்து அடிக்கடி நிகழக்கூடிய நான்கு வேறுபட்ட தொழிற்சாலைகளைப் பட்டியலிடுக.**

- அணுமின் தொழிற்சாலைகள்
- வேதியியல் தொழிற்சாலைகள் ,
- சுரங்கத் தொழிற்சாலைகள்
- தீப்பெட்டி, மற்றும் வெடி தொழிற்சாலைகள்.

**VI. வேறுபடுத்துக.**

**1. புவி அதிர்ச்சி மற்றும் ஆழி பேரலை (சுனாமி).**

| புவி அதிர்ச்சி | ஆழி பேரலை (சுனாமி). |
|---|---|
| புவித்தட்டுகளின் நகர்வு, நிலச்சரிவு, மற்றும் மேற்பரப்பு பிளவு போன்றவை காரணமாக புவிமேலோட்டில் ஏற்படும் நடுக்கத்தை நிலநடுக்கம் அல்லது புவி அதிர்ச்சி என அழைக்கின்றோம். | நிலநடுக்கம் கடலுக்கு அடியில் ஏற்படும் நிலச்சரிவு, எரிமலை வெடிப்பு மற்றும் குறுங்கோள்கள் போன்றவற்றால் ஏற்படும் மிகபெரிய அலைகளே ஆழிப் பேரலையாகும்.. |

**2. வெள்ளம் மற்றும் சூறாவளி.**


| வெள்ளம் | சூறாவளி |
|---|---|
| கனமழை, புயல், பனி உருகுதல், ஆழிப்பேரலை (சுனாமி), அணைக்கட்டு உடைதல் போன்றவற்றால் திடீரென ஏற்படும் அதிக அளவிலான நீர் வெளியேறுதலையே வெள்ளப்பெருக்கு என்கிறோம். | உயர் அழுத்தத்தால் சூழப்பட்ட குறைவழுத்தப் பகுதியில் உருவாகும் காற்று "சூறாவளி" என அழைக்கப்படுகிறது. இது கடல் பகுதியில் வலுவடையும் போது புயலாக மாறுகிறது. |

**3. இடர் மற்றும் பேரிடர்.**

| இடர் | பேரிடர் |
|---|---|
| இடர் என்பது மனித செயல்பாடு அல்லது வாழ்க்கையில் சிறிய அளவில் இழப்பை ஏற்படுத்தும் நிலையாகும். | பேரிடர் என்பது உயிருக்கும் உடைமைகளுக்கும் அழிவை ஏற்படுத்தும் பேராபத்து ஆகும் |
| குறுகிய கால பாதிப்பினை ஏற்படுத்துகிறது. | நீண்ட கால பாதிப்பினை ஏற்படுத்துகிறது. |

**VII. விரிவான விடையளி.**

**1. பேரிடர் மேலாண்மை சுழற்சி பற்றி விளக்குக.**




**தயார்நிலை**

- இந்த படிநிலையானது அரசாங்கம், சமூகங்கள் மற்றும் தனி ஒரு மனிதன் பேரிடர் சூழ்நிலைகளை திறம்பட சமாளிக்க எடுக்கும் பல்வேறு நடவடிக்கைகளை உள்ளடக்கியதாகும்.

**கட்டுப்படுத்துதல் மற்றும் மட்டுப்படுத்துதல்**

- எதிர்கால பேரழிவு அச்சுறுத்தலைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை செயல்படுத்துதல் மற்றும் தவிர்க்க முடியாத அச்சுறுத்தலின் தீங்கு விளைவிக்கும் விளைவுகளைக் குறைத்தல் ஆகியவை அடங்கும்.

**துலங்கல்**

- கட்டுப்பாட்டு அறைகளை அமைத்தல், தற்செயல் திட்டத்தை செயல்படுத்துதல், எச்சரிக்கை விடுதல், வெளியேற்றுவதற்கான நடவடிக்கை, மக்களை பாதுகாப்பான பகுதிகளுக்கு அழைத்துச் செல்வது, தேவைப்படுபவர்களுக்கு மருத்துவ உதவிகளை வழங்குதல், ஒரே நேரத்தில் நிவாரணம் வழங்குதல் உள்ளிட்ட எந்தவொரு பேரிடருக்கும் இது முதல் கட்ட பதிலைக் குறிக்கிறது.

**மீட்புநிலை**

- மீட்புநிலை என்பது அவசரகால நிவாரணம் வழங்குதல், மறுவாழ்வு மற்றும் மறுகட்டமைப்பு போன்ற 3 நிலைகளை உள்ளடக்கியது.

**வளர்ச்சி அல்லது முன்னேற்றம்:**

- வளர்ந்து வரும் பொருளாதாரத்தில், வளர்ச்சி மேம்பாட்டு திட்டம் என்பது தற்போதைய செயல்பாடு ஆகும்.

**2. வெள்ளம் மற்றும் அதன் விளைவுகளையும் அதனை மட்டுப்படுத்துதல் பற்றியும் விளக்குக.**

**வெள்ளம்**

- கனமழை, புயல், பனி உருகுதல், ஆழிப்பேரலை (சுனாமி), அணைக்கட்டு உடைதல் போன்றவற்றால் திடீரென ஏற்படும் அதிக அளவிலான நீர் வெளியேறுதலையே வெள்ளப்பெருக்கு என்கிறோம்.

**விளைவுகள்**

- சொத்து மற்றும் உயிரிழப்பு
- மக்கள் இடப்பெயர்வு
- காலரா மற்றும் மலேரியா போன்ற தொற்று நோய்கள் பரவுதல்.

**மட்டுப்படுத்துதல்**

- வெள்ளத்தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- மழைநீர் வடிகால்களை சரிசெய்தல்.
- நீர்நிலைகளிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுதல் போன்றவை.

**3. ஏதேனும் 5 பொதுவான வாழும் நுட்பங்கள் பற்றி எழுதுக.**

- புவி அதிர்சிசியின்போது மேஜையின் கீழ் செல்; தரையில் மண்டியிடு மற்றும் உங்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

- வெள்ள முன்னறிவிப்பின்போது முதலுதவிக்குத் தேவையான பொருள்களை சேமித்து வைக்கவும், உள்ளூர் ரேடியோ மற்றும் தொலைக்காட்சி அறிவிப்புகளைக் கவனியுங்கள்.
- நிலநடுக்கம் மற்றும் வெள்ளத்தின்போது அனைத்து மின்சார இணைப்புகளைத் துண்டித்துவிடவும்.
- தீ விபத்து எனில் அவசரசேவைக்கு 101 என்ற எண்ணிற்கு தொடர்பு கொள்ளுங்கள்.
- ஒருவருக்கு ஆடையில் எதிர்பாராத விதமாக தீ விபத்து ஏற்பட்டால், அவரை ஓடாமல் தரையில் படுத்து உருள செய்ய வேண்டும்.
- சாலை விபத்தினைத் தவிர்க்க வேண்டுமெனில், ஓட்டுநர் உரிமம் பெற்றவரை மட்டுமே வாகனத்தை இயக்க அனுமதிக்க வேண்டும்

**4. புவி அதிர்ச்சி, அதன் பாதிப்புகள் மற்றும் மட்டுப்படுத்துதல் படிநிலைகள் பற்றி எழுதுக.**

**புவி அதிர்ச்சி**

- புவித்தட்டுகளின் நகர்வு, நிலச்சரிவு, மற்றும் மேற்பரப்பு பிளவு போன்றவை காரணமாக புவிமேலோட்டில் ஏற்படும் நடுக்கத்தை நிலநடுக்கம் அல்லது புவி அதிர்ச்சி என அழைக்கின்றோம்.

**பாதிப்புகள்**

- அதிகப்படியான நிலநடுக்கத்தால் கட்டடங்கள், சாலைகள், பாலங்கள் மற்றும் அணைக்கட்டுகள் இடிந்து சேதமடைகிறது.
- நிலநடுக்கத்தால், வெள்ளம், சுனாமி, நிலச்சரிவு, தீ, மின்சாரம் துண்டிக்கப்படுதல் மற்றும் நீர் குழாய்கள் உடைதல் போன்றவை நிகழ்கின்றன.

**மட்டுப்படுத்துதல்**

- நிலநடுக்கத்தை தாங்கக்கூடிய அளவிலான கட்டிடங்களை கட்டுதல்.
- நிலநடுக்கம் அதிகம் ஏற்படும் இடங்களில் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேம்படுத்துதல்.
- மக்களுக்கு பாதுகாப்பு விழிப்புனர்வினை ஏற்படுத்துதல்.

**VIII உயர்சிந்தனை வினாக்கள்:**

**1. நான் ஏன் இயற்கை பேரிடர்கள் பற்றி அறிந்து கொள்ள வேண்டும்?**

- எதிர்காலத்தில் உருவாகும் பேரிடர்களினால் ஏற்படும் பேராபத்துகளிலிருந்து பாதுகாப்பு பெறத்தேவையான அறிவினை பெற நான் இயற்கை பேரிடர்கள் பற்றி அறிந்து கொள்ள வேண்டும்.

**2. இந்தியாவில் நிலச்சரிவு அடிக்கடி நிகழும் 4 இடங்களைப் பட்டியலிடுக.**

- மேற்குத்தொடர்ச்சி மலைச்சரிவுகள்
- இமயமலைச்சரிவுகள்
- கிழக்குத்தொடர்ச்சி மலைச்சரிவுகள் - ஆந்திரா
- ஆற்றுப்பள்ளத்தாக்கு பகுதிகள்

# குடிமையியல்

## அலகு - 1

## பெண்கள் மேம்பாடு



**I. சரியான விடையை தேர்வு செய்க**

1. பின்வருவனவற்றில் எது பாலின சமத்துவமின்மை அல்ல?
   அ) மோசமான பேறுகால ஆரோக்கியம் ஆ) ஆண்களுக்கு அதிக பாதுகாப்பற்ற தன்மை
   இ) எச்.ஐ.வி/எய்ட்ஸ் பரவுதல் ஈ) பெண்களின் குறைந்த எழுத்தறிவு விகிதம்

2. பாலின சமத்துவம் என்பது எது தொடர்புடைய பிரச்சனை
   அ) பெண் குழந்தைகள்; பெண்களின் பிரச்சனை
   ஆ) அனைத்து சமூகத்திலும் பெண்களும் ஆண்களும் சமம்,
   இ) மூன்றாம் உலக நாடுகள் மட்டும்
   ஈ) வளர்ந்த நாடுகள் மட்டும்

3. பெண்கள் சமூக மற்றும் பொருளாதார ரீதியாக மேம்பட பின்வரும் எந்த உத்திகள் உதவுகின்றது?
   அ) பாகுபாடுகளுக்கு எதிரான சவால்களுக்கு பெண்கள் இணைந்து பணியாற்றுகின்றனர் .
   ஆ) பெண்களுக்கான அதிகமான வருமான ஆதாரங்கள்
   இ) மேம்பட்ட கல்விக்கான அணுகுமுறை
   ஈ) மேலே உள்ள அனைத்தும்

4. வளரும் நாடுகளில் சிறுவர்களை விட பெண்குழந்தைகள் இடைநிலைக் கல்வியை தவற விடுவது ஏன்?
   அ) பள்ளிக் கல்வி கட்டணம் உயர்வு காரணமாக, சிறுவர்கள் மட்டும் பள்ளிக்கு அனுப்பப்படுகிறார்கள்
   ஆ) பெண் குழந்தைகள் வீட்டுவேலை செய்ய எதிர்பார்க்கப்படுகிறது
   இ) குழந்தைத் திருமணம் அவர்களின் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துகிறது
   ஈ) மேலே உள்ள அனைத்தும்

**விடைகள்: 1. ஆ) ஆண்களுக்கு அதிக பாதுகாப்பற்ற தன்மை 2. ஆ) அனைத்து சமூகத்திலும் பெண்களும் ஆண்களும் சமம் 3. ஈ) மேலே உள்ள அனைத்தும் 4. ஆ) பெண் குழந்தைகள் வீட்டுவேலை செய்ய எதிர்பார்க்கப்படுகிறது**

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக**

1. இந்தியாவில் பெண்கள் கல்வியை செயல்வடிவாக்கிய ஜோதிராவ் புலே நினைவில் வைக்கப்படுகிறார் அவர் , தனது மனைவியுடன் ------------- 1848 இல் சிறுமிகளுக்கான முதல் பள்ளியைத் தொடங்கினார்
2. மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் பதவி வகித்த முதல் பெண் --------------------
3. முதல் பெண் காவல்துறை இயக்குநர் (DGP) ____________ ஆவார்
4. புக்கர் பரிசை வென்ற முதல் இந்திய பெண் ______________.

**விடைகள்: 1. சாவித்ரிபாய் பூலே 2. சுஷ்மாஸ்வராஜ் 3. காஞ்சன் சௌத்ரி பட்டாச்சார்யா 4. அருந்ததி ராய்**

**III. பொருத்துக**

1. சிரிமாவோ பண்டாரநாயக - இங்கிலாந்து
2. வாலென்டினா தெரோஷ்கோவா - ஜப்பான்
3. ஜன்கோ தபே - இலங்கை
4. சார்லோட் கூப்பர் - சோவியத் ஒன்றியம்

**விடைகள்: 1. இலங்கை 2. சோவியத் ஒன்றியம் 3. ஜப்பான் 4. இங்கிலாந்து**

IV. **பின்வரும் அறிக்கைகளை ஆராய்க.**

1. பொருத்தமான பதிலைத் தேர்வு செய்க

**கூற்று (கூ)** : இப்போது அனைத்து மனிதாபிமான நடவடிக்கைகள் அனைத்திலும் பெண்கள் ஒருங்கிணைகிறார்கள் .

**காரணம் (கா)** : சமூகத்தின் அனைத்து மோதல்களிலும் பெண்கள் அதிகம் பாதிக்கப்படுகின்றார்கள் .

அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம் ஆகும்

ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி ஆனால், காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம் அல்ல .

இ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு

ஈ) கூற்று தவறானது ஆனால் காரணம் சரி

2. **கூற்று (கூ)** : பெண்களுக்கு எதிரான வன்முறை சாதி, மதம், வர்க்கம், வயது மற்றும் கல்வியை கடந்து நடைபெறுகிறது

**காரணம் (கா)** : வீட்டு வன்முறைகள், கருக்கலைப்பு, பெண் சிசுக் கொலை, வரதட்சணை கொலை, திருமணம் மூலம் கொடுமை, சிறுவருக்கு நிகழும் கொடுமைகள் என வெளிப்படுகிறது

அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம் ஆகும்

ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி ஆனால், காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம் அல்ல.

இ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு

ஈ) கூற்று தவறானது ஆனால் காரணம் சரி

**விடைகள்: 1. அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம் ஆகும். 2. ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி ஆனால், காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம் அல்ல.**

V. **பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க**

**1. சமூகத்தில் பெண்கள் வகிக்கும் பல்வேறு பாத்திரங்களை பற்றி விவாதிக்கவும்.**

- தாய், மனைவி, மகள் என குடும்பத்தில் பல்வேறு நிலைகளில் சிறப்பு செய்யும் பெண்ணானவள் தற்காலத்தில் சமூகத்திலும் தங்கள் திறமைகளை பறைசாற்றி வருகின்றனர்.
- சமூகத்தில் கல்வி, அரசியல், பொருளாதாரம், தகவல் தொழில்நுட்பம் என அனைத்து துறைகளிலும் ஆண்களுக்கு நிகராக பெண்களும் தங்களது பங்களிப்பினை செய்து வருகின்றனர்.

**2. பாலின சமத்துவம் என்றால் என்ன?**

- குடும்பம், சமூகம் என அனைத்து நிலைகளிலும் ஆண் - பெண் வேறுபாடின்றி அனைவருக்கும் சம உரிமை மற்றும் அதிகாரமளித்தலே பாலின சமத்துவம் ஆகும்.

**3. பெண்கள் உரிமையை விளக்குக.**

- இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள பெண்கள் உரிமைகளில் சமத்துவம், கண்ணியம் மற்றும் பாகுபாடுகளில் இருந்து சுதந்திரம் ஆகியன அடங்கும்.
- பெண்களின் உரிமைகளை உறுதிப்படுத்தும் மேலும் பல்வேறு சட்டங்கள் இந்தியாவில் உள்ளன.

**4. பெண்களின் மேம்பாட்டிற்கான அத்தியாவசிய காரணிகளை பட்டியலிடுக.**

- கல்வி ஒருவருக்கு அறிவுபூர்வமாகச் சிந்திக்கும் திறன் மற்றும் தனித்தன்மை வாய்ந்த முடிவுகளை எடுக்க உதவுகிறது.
- பாலினப்பாகுபாடு பார்க்கும் சமூகம் எக்காலத்திலும் முன்னேவறுதற்கான வாய்ப்பு அரிது.
- சாதி, இன, சமய பாகுபாடுகளை அடிப்படையாகக் கொண்ட சமூகம், முன்னேற்றம் அடையாது

**5. பெண் கல்வியின் முக்கியத்துவத்தை குறிப்பிட்டு ஒரு கட்டுரையை எழுதுக.**

**1. அதிகரித்த கல்வியறிவு:**

- உலகெங்கிலும் கல்வியறிவற்ற இளையோரில் கிட்டத்தட்ட 63 சதவிகிதம்பேர் பெண்கள்.

- எனவே அனைத்துக் குழந்தைகளுக்கும் கல்வி வழங்கப்பட வேண்டும் அப்போதுதான் பின்தங்கிய நாடுகளும் முன்னேற்றம் அடையும்.

**2. ஆள் கடத்தல்:**

- ஆள் கடத்தலில் அதிகம் பாதிக்கப்படுவது படிப்பறிவு இல்லாத பெண்கள் மற்றும் ஏழ்மையான குடும்பத்தைச் சேர்ந்தவர்களேயாகும்.
- இளம் பெண்களுக்கு அடிப்படைத் திறன்கள் மற்றும் அவர்களுக்கான வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருவதினால் ஆள் கடத்தல்கள் கணிசமாகக் குறைக்கப்படும் என்று ஆள்கடத்தல்கள் பற்றிய ஐக்கிய நாடுகளின் இடை முகமைத் திட்டம் விளக்குகின்றது.

**3. அரசியல் பிரதிநிதித்துவம்:**

- உலகம் முழுவதும் பெண்கள் வாக்காளர்களாகவே உள்ளனர். அவர்களது அரசியல் ஈடுபாடு கட்டுப்படுத்தப்படுகிறது.
- குடிமைக்கல்வி மற்றும் குடிமைப் பயிற்சி அனைத்து விதமான மேம்பாடு மற்றும் முன்னேற்றத்திற்கான தடைகளை உடைக்கின்றது என்று ஐக்கிய நாடுகளின் பெண்களுக்கான தலைமை மற்றும் பங்கேற்பினைப் பற்றிய ஆய்வு பரிந்துரைக்கிறது.

**4. வளரும் குழந்தைகள்:**

- கல்வியறிவு பெற்ற தாய்மார்களின் குழந்தைகள் கல்வியறிவு பெறாத தாய்மார்களின் குழந்தைகளை ஒப்பிடுகையில் இரு மடங்கு அதிகரித்து ஐந்து வயதுக்கு மேல் வாழ வாய்ப்புள்ளது என்று ஐக்கிய நாடுகளின் பெண்களுக்கான கல்வி முனைப்பு நிறுவனம் பரிந்துரைத்துள்ளது.

**5. காலம் தாழ்த்திய திருமணம்:**

- பின்தங்கிய நாடுகளில் மூன்றில் ஒரு பெண்குழந்தைக்குப் பதினெட்டு வயதுக்குள் திருமணமாகிவிடுகிறது மற்றும் எந்த நாடுகளில் பெண்குழந்தைகள் ஏழு அல்லது அதற்கும் மேலான வருடங்கள் படிக்கிறார்களோ, அவர்களின் திருமணம் நான்கு ஆண்டுகள்வரை தள்ளிப்போகிறது என்று ஐக்கிய நாடுகளின் மக்கள் தொகை நிதியம் பரிந்துரைக்கிறது.

**6. வருமான சாத்தியம்:**

- ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பின் (UNESCO) கூற்றுப்படி கல்வி ஒரு பெண்ணின் வருமானம் ஈட்டும் திறனை அதிகரிக்கிறது.
- ஒரு பெண் ஆரம்பக் கல்வி பெற்றாள் கூட அந்த பெண்ணின் வருவாயில் 20 சதவீதம் வரை அதிகரிக்க உதவுகின்றது.

**7. மொத்த உள்நாட்டு உற்பத்தியை மேம்படுத்துதல்:**

- பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு கல்வி வாய்ப்புகள் வழங்கப்படும்போது மொத்த உள்நாட்டு உற்பத்தியானது உயருகிறது.
- 10 சதவீதம் கூடுதலாக பெண்கள் கல்வி கற்றால் மொத்த உள்நாட்டு உற்பத்தி சராசரியாக மூன்று சதவிகிதம் அதிகரிக்கின்றது.

**8. வறுமை குறைப்பு:**

- பெண்களுக்குக் கல்வியில் உரிமைகள் சம வாய்ப்புகள் வழங்கப்பட்டால் அவர்களும் பொருளாதார செயல்பாடுகளில் பங்கேற்பர்.
- இதனால் அவர்களின் வருவாய் ஈட்டும் திறன் அதிகரித்த வறுமை அளவை குறைக்க வழி ஏற்படும்

## அலகு - 2

# சந்தை மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு



**I. சரியான விடையை தேர்வு செய்க.**

1. எந்தவொரு சந்தர்ப்பத்தில் ஒரு நுகர்வோர் குறைபாடுள்ள தயாரிப்புக்காக உற்பத்தியாளருக்கு எதிராக புகார் செய்ய முடியாது?

அ) காலாவதியாகும் தரவு குறிப்பிடப்படாதது ஆ) பொருட்களின் விலை
இ) பொருட்களின் தொகுதி எண் ஈ) உற்பத்தியாளரின் முகவரி

2. உற்பத்தியாளரின் முடிவில் இருந்து நுகர்வோர் பல்வேறு சிக்கல்களை எதிர்கொள்கின்றனர்?

அ) நியாயமற்ற வர்த்தக நடைமுறைகள் ஆ) பரந்த அளவிலான பொருட்கள்
இ) நிலையான தரமான பொருட்கள் ஈ) உற்பத்தியின் அளவு

3. நுகர்வோருக்கு ஒரு பொருட்கள் தயாரிப்பு பற்றிய போதுமான தகவல்கள் வழங்கப்பட வேண்டும்.

அ) உற்பத்தியின் முதலீடு ஆ) பொருட்கள் விற்பனையில் முடிவு
இ) கடனில் பொருட்கள் வாங்குதல் ஈ) பொருட்கள் வாங்குவதில் முடிவு

4. தேசிய, மாநில மற்றும் மாவட்டங்களில் உள்ள நுகர்வோர் நீதிமன்றங்களின் அமைப்பு, வணிகர்களின் நியாயமானதை வர்த்தக நடைமுறைகளுக்கு எதிரான நுகர்வோர் குறைகளை ஆராய்வது என அழைக்கப்படுகிறது

அ) மூன்று அடுக்கு அமைப்பு ஆ) ஒரு அடுக்கு அமைப்பு
இ) இரு அடுக்கு அமைப்பு ஈ) நான்கு அடுக்கு அமைப்பு

5. தரம் குறைவான பிற வெளிப்புற பொருள்களை ஒரு உயர்ந்த தரமான பொருளுடன் கலப்பது எவ்வாறு அழைக்கப்படுகிறது?

அ) தூய்மையாக்கல் ஆ) கலப்படம் இ) சுத்திகரிப்பு ஈ) மாற்றம்

**விடைகள்: 1. இ) பொருட்களின் தொகுதி எண் 2. அ) நியாயமற்ற வர்த்தக நடைமுறைகள் 3. ஈ) பொருட்கள் வாங்குவதில் முடிவு 4. அ) மூன்று அடுக்கு அமைப்பு 5. ஆ) கலப்படம்**

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ______ பொருட்கள் சேவைகள் மற்றும் தகவல்களின் ஈடுபடும் ஒரு சந்தை என்று அழைக்கப்படுகிறது.

2. ஒழுங்குப்படுத்தப்பட்ட சந்தைகளில், பொருத்தமான ________ அதிகாரிகளால் சில மேற்பார்வை உள்ளது.

3. ___________ என்பது ஒரு சந்தை கட்டமைப்பைக் குறிக்கிறது, அதில் முழு உற்பத்தியிலும் ஒரு கட்டுப்பாட்டைக் கொண்ட ஒரு ஒற்றை தயாரிப்பு அல்லது விற்பனையாளராக இருக்கிறார்.

4. ___________ நியாயமற்ற வர்த்தக நடைமுறைகளை சரிபார்க்க நுகர்வோர் பாதுகாப்பு துறையின். மகா சாசனம் என்று கருதப்படுகிறது.

**விடைகள்: 1. அமைப்புகள் 2. அரசாங்க 3. முற்றுரிமை 4. நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம்**

**III. பின்வருவனவற்றைப் பொருத்தவும்:**

1. நுகர்வோர் உற்பத்தி சட்டம் - 1955
2. சட்ட பூர்வமான அளவீட்டு சட்டம் - 1986
3. இந்திய தர நிர்ணய பணியகம் - 2009
4. அத்தியாவசிய பொருட்கள் சட்டம் - 1986

**விடைகள்:** 1. 1986 2. 2009 3. 1986 4. 1955

IV. **பின்வரும் கூற்றுகளை ஆய்க.**

1. **பொருத்தமான பதிலைத் தேர்வு செய்க:**

**கூற்று:** உள்ளூர் சந்தைகளில் வாங்குபவர்களும் விற்பவர்களும் உள்ளூர் பகுதி பகுதியை சேர்ந்தோர் அல்லது மட்டுமே .

**காரணம்:** ஒரு சந்தை இயற்க்கை இடம் அல்லது புவியியல் இருப்பிடத்திற்கு கட்டுப்படுத்தப்படவில்லை

அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம் ஆகும்

ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி ஆனால், காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம் அல்ல .

இ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு

ஈ) கூற்று தவறானது ஆனால் காரணம் சரி

**விடை:** 1. **ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி ஆனால், காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம் அல்ல**

V. **பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும்**

1. **சந்தை என்றால் என்ன?**

- பொருள்கள், சேவைகள் மற்றும் தகவல்களைப் பரிமாறிக்கொள்ளும் இரண்டு அல்லது அதற்கும் மேற்பட்ட அமைப்பு சந்தை என அழைக்கப்படும்.
- ஒரு சந்தை என்பது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அமைப்புகள் வாங்குவதிலும் விற்பதிலும் ஈடுபடுகின்ற இடமாக அமைகின்றது.

2. **'நுகர்வோர் பாதுகாப்பு' விவரிக்கவும்.**

- நுகர்வோர் பாதுகாப்பு என்பது நுகர்வோரின் உரிமைகள், நியாயமான வர்த்தகப் போட்டி மற்றும் துல்லியமான தகவல்கள் சந்தையில் இருக்க வேண்டும் என்பதற்காக இயற்றப்பட்ட சட்டங்களின் குழு ஆகும்.

3. **நுகர்வோரின் உரிமைகளைப் பட்டியலிடுக**

1. அடிப்படைத் தேவைகளுக்கான உரிமை
2. பாதுகாப்புக்கான உரிமை
3. தகவல் அறியும் உரிமை
4. தேர்ந்தெடுக்கும் உரிமை
5. பிரதிநிதித்துவ உரிமை
6. குறை தீர்க்கும் உரிமை
7. நுகர்வோர் கல்வி மற்றும் உரிமை
8. தூய்மையான சுற்றுப்புறச் சூழலைப் பெறுவதற்கான உரிமை

4. **நுகர்வோர் நீதிமன்றங்களின் பங்கு பற்றி விவாதிக்கவும்**

**தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம் (NCDRC):**

- ஒரு தேசிய அளவிலான நீதிமன்றம் இந்தியா முழுவதற்கும் குறைதீர் ஆணையமாக செயல்படுகிறது.
- தேசிய ஆணையம் நுகர்வோர் நீதிமன்றங்களின் உச்ச அமைப்பாகும்.
- இவ்வகை நுகர்வோர் நீதிமன்றங்கள் மிக உயர்ந்த மேல்முறையீட்டு நீதிமன்றமாகும்.
- தேசிய நுகர்வோர் குறைதீர் நிவாரண ஆணையம். இந்தியாவில் ஒரு பகுதியான நீதி ஆணையமாகும்.
- இது 1986 ஆம் ஆண்டில் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் 1988- இல் அமைக்கப்பட்டது அதன் தலைமை அலுவலகம் புது டெல்லியில் உள்ளது.

- இந்த ஆணையம் அதனை இந்தியாவில் உச்ச நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதியின் தலைமையில் செயல்படுகிறது.

**<u>மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம் (SCDRC):</u>**

- மாநில அளவில் ஒரு நீதிமன்றம் செயல்படுகிறது. இழப்பீடு கோரப்பட்ட வழக்குகள் 20 லட்சத்திற்கும் மேல் இருக்குமானால் மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம் அதனை ஏற்கிறது.
- மாவட்ட ஆணையத்தின் மேல்முறையீட்டு அதிகார வரம்பை மாநில ஆணையம் கொண்டுள்ளது.

**<u>மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையம் (DCDRC):</u>**

- மாவட்ட நுகர்வோர் குறைதீர் நீதிமன்றம் இழப்பீடு 20 லட்சம் வரை விசாரிக்க அனுமதிக்கிறது அனுமதிக்கிறது.
- மாவட்ட அளவிலான நீதிமன்றம் மாவட்ட அளவில் செயல்படுகிறது

**5. சந்தைகளின் வகைகள் மற்றும் அதன் செயல்பாடுகளைப் பற்றி எழுதுக.**

1. **புவியியல் இருப்பிடத்தின் அடிப்படையில்**
   - உள்ளூர் சந்தைகள், பிராந்திய சந்தைகள், தேசிய சந்தைகள், சர்வதேச சந்தை
2. **நேரத்தின் அடிப்படையில்**
   - மிகக் குறுகிய கால சந்தை, குறுகிய கால சந்தை, நீண்ட கால சந்தை
3. **பரிவர்த்தனையின் அடிப்படையில்**
   - உடனடிச் சந்தை, எதிர்கால சந்தை
4. **ஒழுங்குமுறை அடிப்படையில்**
   - ஒழுங்குபடுத்தப்பட்ட சந்தை, கட்டுப்பாடற்ற சந்தை
5. **போட்டியின் தன்மை அடிப்படையில்**
   - முற்றுரிமை, ஏகபோக போட்டி

## அலகு - 3

# சாலைப் பாதுகாப்பு



**I. சரியான விடையைத் தேர்வு செய்க.**

1. சாலைப்பா துகாப்பு என்பது இவர்களுக்கானது

   அ) வழிப் போக்கர்கள் ஆ) ஓட்டுநர்கள்

   இ) பொதுமக்கள் ஈ) சாலையைப் பயன்படுத்துவோர் அனைவருக்கும்

2. சாலை விபத்துகள் ஒரு நாட்டின் ____________ பாதிக்கின்றன

   அ) முன்னேற்றத்தை ஆ) வாழ்வை

   இ) பொருளாதாரத்தை ஈ) மேற்கூறிய அனைத்தையும்

3. அனுமதி என்பது

   அ) இயக்குவதற்கு அனுமதி ஆ) பொருள்களை எடுத்துச் செல்ல அனுமதி

   இ) ஓட்டுநருக்கு சான்றிதழ் ஈ) வாகனத்தை பதிவு செய்த சான்றிதழ்

4. ரக்ஷா பாதுகாப்பு

   அ) பாதசாரிகள் ஆ) மோட்டார் வாகன ஓட்டிகள் இ) கார் இயக்குபவர்கள் ஈ) பயணிகள்

5. இந்தியாவில் சாலைப் பாதுகாப்பு வாரம் முதன் முதலாகக் கொண்டாடப்பட்ட வருடம்

   அ) 1947 ஆ) 1990 இ) 1989 ஈ) 2019

**விடைகள்: 1. ஈ) சாலையைப் பயன்படுத்துவோர் அனைவருக்கும் 2. ஈ) மேற்கூறிய அனைத்தையும் 3. அ) இயக்குவதற்கு அனுமதி 4. இ) கார் இயக்குபவர்கள் 5. இ) 1989**

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. போக்குவரத்தில் மனிதனின் மிக பயனுள்ள கண்டுபிடிப்பு ______________ ஆகும்.
2. நமது வாழ்க்கைப் பயணத்தில் ______________ யைப் பயன்படுத்துவது தவிர்க்க முடியாததாகும்.
3. சாலைகளில் அதிகமான வாகனங்களால் _________ மற்றும் _______ மாசுபாடும் ஏற்படுகின்றன.
4. _________________ குடும்பத்திற்கு வருமானம் ஈட்டித் தருபவர் ஆவார்
5. மருத்துவ உதவியின் அவசர தேவைக்கு _______________ எண்ணை அழைக்கலாம்.

**விடைகள்: 1. சக்கரம் 2. வாகனங்களை 3. போக்குவரத்து நெரிசல், காற்று 4. குடும்பத்தலைவன் 5. 108**

**III. பொருத்துக.**

1. தகவல் குறியீடுகள் - போக்குவரத்து விளக்குகள்
2. வரிக்குதிரை கடப்பு - குறுகிய வளைவு குறியீடு
3. கட்டாயக் குறியீடுகள் - பெட்ரோல் பங்க் குறியீடு
4. எச்சரிக்கைக் குறியீடுகள் - ஓட்டுநர் உரிமம்
5. வாகனம் ஓட்டும் உரிமை - பாதசாரிகள்

**விடைகள்: 1. பெட்ரோல் பங்க் குறியீடு 2. பாதசாரிகள் 3. போக்குவரத்து விளக்குகள் 4. குறுகிய வளைவு குறியீடு 5. ஓட்டுநர் உரிமம்**

**IV. சரியான கூற்றைத் தேர்ந்தெடு.**

1. **கூற்று:** கார் பூலிங் என்பது ஒரே தடத்திலிருந்து பலர் ஒன்றுகூடி ஒரே வாகனத்தைப் பயன்படுத்துவது.
**காரணம்:** அது எரிபொருள், நேரம் மற்றும் பணத்தை மிச்சப்படுத்துகிறது.

அ) கூற்று சரி, காரணம் தவறு ஆ) கூற்று சரி, காரணமும் சரி
இ) கூற்று தவறு, காரணம் சரி ஈ) இரண்டுமே தவறு

**விடை: ஆ) கூற்று சரி, காரணமும் சரி**

**V. பொருத்தமில்லாத ஒன்றைக் கண்டுபிடி.**

அ) கார் ஆ) டிரக் இ) டெம்போ ஈ) ஏரோப்ளேன் **விடை: ஈ) ஏரோப்ளேன்**

**VI. கீழ்க்காணும் கூற்றுகளில் சரியானவை எவை என்பதைக் கண்டுபிடி.**

அ) பள்ளிப் பாடத்திட்டத்தில், சாலைப் பாதுகாப்புக் கல்வியை இணைப்பது மாணவர்களுக்கு மேலும் சுமையை அதிகரிப்பதே ஆகும்.

ஆ) சாலைகளில் மண் குவிப்பதைத் தடை செய்ய வேண்டும்.

இ) குழந்தைப்பருவத்திலிருந்தே சாலைப் பாதுகாப்பு விதிகளைக் கடைப்பிடித்தல் , பிற்காலத்தில் அவர்களது பழக்க வழக்க மாகிவிடும்.

**விடை: ஆ மற்றும் ஆ**

**VII. ஓரிரு வாக்கியங்களில் விடையளி.**

**1. வாகனம் இயக்கும் போது ஏற்படக்கூடிய கவனச்சிதறல்கள் எவை?**

- ஓட்டுநர் வாகனத்தை இயக்கும்போது, வேறு ஏதேனும் செயல்களில் ஈடுபடுவதால், கவனச்சிதறல் ஏற்படுகிறது.
- வாகனம் இயக்கும்போது, கைப்பேசியில் பேசுவதோ, அதில் குறுஞ்செய்தி அனுப்புவதோ, மற்ற பல செயல்களில் ஈடுபடுவதோ கவனச்சிதறலுக்கு வழிவகுக்கிறது.

**2. பாதுகாப்பாக வாகனத்தை இயக்குவதற்கு இரண்டு பாதுகாப்பு முறைகளைக் கூறு.**

- இரு சக்கர வாகனங்கள் ஓட்டும்போது தலைக்கவசம் பயன்படுத்துதல்
- நான்கு சக்கர வாகனங்கள் ஓட்டும்போது சீட் பெல்ட் பயன்படுத்துதல்

**3. இரவு நேரங்களில் வாகனம் இயக்குவது பாதுகாப்பற்றது ஏன்?**

- இரவு நேரத்தில் வாகனம் இயக்கும்போது அதிகமான கவனம் தேவைப்படுகிறது.
- கட்டுப்படுத்த முடியாத தூக்கம், அதிக தூரம் தொடர்ந்து வாகனங்களை இயக்குவதால் ஏற்படும் சோர்வு மற்றும் சாலையில் குறைந்த வெளிச்சம் ஆகியவையே கோரமான சாலை விபத்துகளுக்குக் காரணமாகின்றன.

**4. ஒரு வாகனத்தை இயக்குவதற்குரிய உரிமம் எப்போது ஒருவருக்குக் கிடைக்கும்?**

- ஓட்டுநர் உரிமம் பெறுவதற்குத் தேவையான பயிற்சியும் அதற்கான தேர்வுகளில தேர்ச்சியும் பெற்றிருக்க வேண்டும்.
- இந்திய சட்டப்படி, ஒருவர் வாகன ஓட்டுநர் உரிமம் பெற வயது 18.

**5. பொதுமக்களிடையே சாலைப்பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வு ஏற்பட ஊடகம் என்ன செய்ய வேண்டும்?**

- சாலை பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த வெகுஜன ஊடகங்களும் பத்திரிகைகளும் முக்கிய பங்கு வகிக்கக்கூடும்.
- குறிப்பாக, அவை தடுப்புச் செய்திகளைப் பரப்புவதோடு பாதுகாப்பான நடத்தைகளை ஊக்குவிக்கவும், மக்களின் அறிவையும் பிரச்சினையின் ஈர்ப்பு பற்றிய புரிதலையும் அதிகரிக்கலாம் மற்றும் பாதுகாப்பான சாலைகள் மற்றும் அமைப்புகளுக்காக வாதிடலாம்.

**VIII. விரிவான விடையளி.**

**1. ஓர் இந்தியன் வாகனம் ஓட்டுவதற்குத் தேவையான ஆவணங்கள் எவை?**

- வாகன இயக்குபவர்கள், எப்போதும் தம்முடைய ஓட்டுநர் உரிமம், வாகனத்தின் பதிவுச் சான்றிதழ், காப்பிட்டுச் சான்றிதழ், வாகனவரி கட்டியதற்கான சான்றிதழ், அனமதி மற்றம் தகுதித் சான்றிதழ் ஆகியவற்றை வைத்திருக்க வேண்டும்.

**2. பள்ளிப் பாடத்திட்டத்தில் சாலைப் பாதுகாப்புக் கல்வியை இணைத்திடும் தேவை என்ன?**

- குழந்தை பருவத்திலிருந்தே போக்குவரத்துக் கல்வியை கற்று தருவதால் விபத்துகள் ஏற்படாமல் பாதுகாக்கிறது.
- மாணவர்கள் சாலை பாதுகாப்பு மற்றும் சாலை விதிகள் பற்றிய அறிவும் பெறுகின்றனர்.
- இது மாணவர்களை வழிநடத்தவும், சாலைகளை பாதுகாப்பாக கடக்கவும், தேவையான கல்வியறிவு கிடைக்கச்செய்கிறது.

**3. பெற்றோர் தங்கள் குழந்தைகளுக்குச் சாலைப்பாதுகாப்பு விதிகளை எவ்வாறு கற்றுக் கொடுக்கலாம்?**

- இளம் வயதினருக்கு சாலைப்பாதுகாப்புக் கல்வியைத் தருவதில் பெற்றோரும் ஆசிரியர்களும் பெரும்பங்கு வகிக்கின்றனர்.
- போக்குவரத்து குறியீடுகள் மற்றும் போக்குவரத்து விதிகளை குழந்தைகள் அறிந்திட உதவுங்கள்.
- சரியான குறியீட்டிற்காக காத்திருந்து பாதசாரிகளுக்கான வரிக்குதிரை பாதையின் வழியாகச் சாலையை கடந்திட அறிவுறுத்துங்கள்.
- சாலைகளில் அங்கும் இங்குமாகவோ, குறுக்காகவோ ஓடுதல் கூடாது என்பதை எச்சரிக்கை செய்யுங்கள்.
- சாலைகளில் நடந்து செல்லும் போது நடைபாதையை பயன்படுத்தவேண்டும் என்பதை கற்றுக் கொடுக்க வேண்டும்.

TNPSCJOB

IX. உயர் சிந்தனை வினா.

**1. சாலைப் பாதுகாப்பு விதிகளைப் பற்றித் தெரிந்து கொண்ட நீங்கள், உங்கள் பெற்றோர்கள், உறவினர்கள் இடையே எவ்வித தாக்கத்தை ஏற்படுத்துவீர்கள்?**

- சாலை விதிகளை பின்பற்ற வழிவுறுத்துவேன்.

**2. சக்கரம் கண்டுபிடிக்கப்படாமல் இருந்திருந்தால், நமது போக்குவரத்து எவ்விதமாக இருந்திருக்கும்?**

- விலங்குகளை மட்டுமே நம்பி இருந்திருக்கும்.

# பொருளியல்

## அலகு - 1

## வரி மற்றும் அதன் முக்கியத்துவம்




**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.**

1. வரிகள் என்பவை --------- செலுத்தப்பட வேண்டும்.
   அ) விருப்பத்துடன் ஆ) கட்டாயமாக இ) அ மற்றும் ஆ ஈ) இவற்றில் எதுவுமில்லை
2. வசூலிக்கப்படும் வரியிலிருந்து குறைந்த அளவிலேயே தொகை செலவழிக்கப்படுவது------
   அ) சமத்துவ விதி ஆ) உறுதிப்பாட்டு விதி இ) சிக்கன விதி ஈ) வசதி விதி
3. வளர்வீத வரிக்கு எதிராக அமைந் துள்ள வரி ------
   அ) விகிதச்சாரா வரி ஆ) தேய்வுவீத வரி இ) அ மற்றும் ஆ ஈ) இவற்றில் எதுவுமில்லை
4. வருமான வரி என்பது ------
   அ) நேர்முக வரி ஆ) மறைமுக வரி இ) அ மற்றும் ஆ ஈ) இவற்றில் எதுவுமில்லை
5. சேவை வழங்குவதன் அடிப்படையில் விதிக்கப்படுவது ---------
   அ) செல்வ வரி ஆ) நிறுவன வரி இ) விற்பனை வரி ஈ) சேவை வரி

**விடைகள்: 1. ஆ) கட்டாயமாக 2. இ) சிக்கன விதி 3. ஆ) தேய்வுவீத வரி 4. அ) நேர்முக வரி 5. ஈ) சேவை வரி**

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. வழக்கமாக, அரசால் விதிக்கப்படும் வரியையே --------என்னும் சொல்லால் குறிக்கிறோம்.
2. வருமான அளவைப் பொருட்படுத்தாமல் ஒரே மாதிரியாக வரி விதிப்பது ---------.
3. ----- வரி என்பது, அன்பளிப்பின் மதிப்பைப் பொருத்து, அன்பளிப்பு பெறுபவர் அரசுக்குச் செலுத்துவதாகும்.
4. .................. வரிச்சுமையை வரி செலுத்துவோர் மாற்ற முடியாது.
5. மறைமுக வரி என்பது ................ நெகிழ்ச்சி உடையது.

**விடைகள்: 1. வரிவிதிப்பு 2. விகிதாச்சார வரி 3. அன்பளிப்பு 4. நேர்முக வரி 5. அதிக**

**III. பின்வருவனவற்றைப் பொருத்துக:**

1. வரி விதிப்புக் கொள்கை - நேர்முக வரி
2. சொத்து வரி - சரக்கு மற்றும் சேவை வரி
3. சுங்கவரி - ஆடம்ஸ்மித்
4. 01.07.2017 - குறைந்த நெகிழ்ச்சி உடையது
5. நேர்முக வரி - மறைமுக வரி

**விடைகள்: 1. ஆடம்ஸ்மித் 2. நேர்முக வரி 3. மறைமுக வரி 4. சரக்கு மற்றும் சேவை வரி 5. குறைந்த நெகிழ்ச்சி உடையது**

**IV பொருந்தாத ஒன்றைத் தேர்ந்தெடுக்கவும்.**

1. பின்வருவனவற்றில் எது மறைமுக வரி அல்ல?

அ) சேவை வரி ஆ) மதிப்பு கூட்டப்பட்ட வரி (VAT) இ) சொத்துவரி ஈ. சுங்கவரி

**விடை: இ) சொத்துவரி**

**V சரியான ஒன்றைத் தேர்ந்தெடுக்கவும்.**

1. பின்வரும் வரியில் எது நேர்முக வரி?

அ) சேவை வரி அ) செல்வ வரி இ) விற்பனை வரி ஈ) வளர் விகித வரி **விடை: அ) செல்வ வரி**

**VI சுருக்கமாக விடையளிக்கவும்.**

**1. வரியை வரையறுக்கவும்.**

- வரி செலுத்துவோர் எவ்வித நேரடியான பலனையும் எதிர்பார்க்காமல் அரசுக்குக் கட்டாயமாக செலுத்துபவையே வரிகள் ஆகும்.


**2. வரி ஏன் விதிக்கப்படுகிறது?**

- அரசு நிர்வாகத்தை நிர்வகிக்கவும், மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்தவும் வரி விதிக்கப்படுகிறது.

**3. வரிவிதிப்பு வகைகளின் பெயரை எழுதி அதன் வரைபடத்தை வரையவும்.**

**வரி விதிப்பு வகைகள்:**

1. விகிதாச்சார வரி 2. வளர் வீத வரி 3. தேய்வு வீத வரி




**வரி விதிப்பின் வகைகள்**

**4. வரிகளின் முக்கியத்துவம் ஏதேனும் மூன்றினைக் கூறுக.**

- நலவாழ்வு, கல்வி, ஆட்சி நிர்வாகம், உள்கட்டமைப்பு மேம்பாடு போக்குவரத்து, வீட்டு வசதி

**5. வரியின் வகைகள் யாவை? மற்றும் அதனைப் பற்றி விளக்குக.**

**1. நேர்முக வரி -**

- தனியாளோ ,நிறுவனமோ நேரடியாக அரசுக்கு வரி செலுத்துவதைக் குறிக்கும்.
- எ.காட்டு - சொத்து வரி, வருமான வரி

**2. மறைமுக வரி -**

- தொடக்கத்தில், ஒருவருக்கு விதிக்கப்பட் வரிச்சுமை, மற்றொருவர் மீது மாற்ற இயலும் முறையையே மறைமுக வரி என்கிறோம்.
- எ.காட்டு - சேவை வரி, விற்பனை வரி, கலால் வரி, பொழுதுபோக்கு வரி

**6. நன்கொடை அல்லது அன்பளிப்பு வரி மற்றும் சேவை வரி பற்றிச் சிறுகுறிப்பு வரைக.**

**அன்பளிப்பு வரி:**

- ஒருவர் வெகுமதியாக அல்லது அன்பளிப்பாக பெறும் பொருள்களின் மதிப்புக்கேற்ப விதிக்கப்படும் வரி அன்பளிப்பு வரியாகும்.

**சேவை வரி:**

- சேவை வழங்குவதன் அடிப்படையில் விதிக்கப்படுவது சேவை வரியாகும். சேவையை பெறுபவர்களிடமிருந்து வரி வசூலிக்கப்பட்டு மத்திய அரசுக்குச் செலுத்தப்படுகிறது.

**7. சரக்கு மற்றும் சேவை வரி (GST என்றால் என்ன?**

- பொருள்களின் விற்பனை, உற்பத்தி, பயன்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் விதிக்கப்படுவது பொருள் மற்றும் சேவை வரியாகும்.
- தேசிய அளவில் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சியின் அடிப்படையில் சரக்கு மற்றும் சேவை வரி விதிக்கப்படுகிறது.

**8. நேர்முக மற்றும் மறைமுக வரிக்கு இடையிலான வேறுபாடுகள் யாவை?**

| | நேர்முக வரி | மறைமுக வரி |
|---|---|---|
| 1 | வரி செலுத்துவோர், தமக்கு விதிக்கப்பட்ட வரிச்சுமையைப் பிறருக்கு மாற்ற இயலாது. | ஒருவர், தமக்கு விதிக்கப்பட்ட வரிச்சுமையை மிக எளிதாக வேறொருவருக்கு மாற்ற இயலும் |
| 2 | தனியாள் மற்றும் நிறுவனங்கள் பெறும் வருமானங்கள் மீது வரி விதிக்கப்படுகிறது. | பல்வேறு பொருள் மற்றும் சேவைகளின் மீது வரி விதிக்கப்படுகிறது |
| 3 | பணவீக்க அழுத்தம் இல்லை | பணவீக்க அழுத்தம் உண்டு |
| 4 | வரித் தாக்கமும் வரி நிகழ்வும் சமமாக உள்ளன. | வரித் தாக்கமும் வரி நிகழ்வும் வெவ்வேறாக உள்ளன. |
| 5 | நெகிழ்வுத் தன்மை குறைவு. | நெகிழ்வுத்தன்மை அதிகம். |

**VII விரிவான விடையளிக்கவும்.**

**1. வரி விதிப்பு கொள்கை பற்றிச் சுருக்கமாகக் கூறுக.**

**சமத்துவ விதி:**

- மக்கள் தத்தமது வசதிக்கேற்ப வகையில் செலுத்துவதற்கு அரசு வரி விதிக்கும் முறைகளுள் ஒன்று சமத்துவ விதியாகும்.
- இதனால் அனைவரும் சமமாக வரி செலுத்த வேண்டும் என்பது பொருளன்று, மாறாக மக்கள் மீது சுமத்தப்படும் வரியானது, எளிமையாகவும், நியாயமாகவும் இருக்க வேண்டும் என்பதையே இவ்விதி விளக்குகிறது.

**உறுதிப்பாட்டு விதி:**

- வசூலிக்கப்படும் வரியின் மூலம் வரி செலுத்துவோர்க்கு ஓர் உறுதிப்பாட்டுத் தன்மையை, இவ்விதி உருவாக்குகிறது. பொருளாதார வளத்தை மேம்படுத்துகிறது.
- ஏனெனில் இவ்விதியின் மூலம் பொருளாதாரத்தில் ஏற்படும் அனைத்து வீண் செலவுகளும் தவிர்க்கப்படுகின்றன.

**வசதி விதி :**

- வரி செலுத்துவோர்க்கு அதிகபட்ச வசதிகளை வழங்கும் வகையில் வரி விதிக்கப்பட்டு வசூலிக்கப்படுகிறது.
- வரி செலுத்துவோர் தாம் செலுத்தும் வரியின் மூலம் குறைந்தபட்ச அளவிலேயே துன்பப்படுவர்.

**சிக்கன விதி:**

- வசூலிக்கப்படும் வரியிலிருந்து குறைந்த அளவிலேயே தொகை செலவழிக்கப்பட வேண்டும்.
- வசூலிக்கப்பட்ட தொகை முழுவதும் அரசுக் கருவூலத்தின் இருப்பில் வைக்கப்பட வேண்டும்.

**2. வரி விதிப்பின் வகைகளாக விளக்குக.**

**வரி விதிப்பின் வகைகள்**

1. விகிதாச்சார வரி (Propotional tax)
2. வளர் வீத வரி (Progressive tax)
3. தேய்வு வீத வரி (Regressive tax)

**விகிதாச்சார வரி:**

- வருமான அளவைப் பொருட்படுத்தாமல், ஒரே மாதிரியாக வரி விதிப்பது, விகிதாச்சார வரி ஆகும்.
- வருமான விகிதத்திற்கேற்ப, வரி விகிதமும் மாறுபடும்.

**வளர்வீத வரி** :

- ஒருவரின் வருமானம் அதிகரிக்கும்போது, அதற்கேற்ப வரி விகிதிமும் அதிகரிப்பது, வளர்வீத வரி ஆகும். (எ.கா) ஒருவரின் ஆண்டு வருமானம் ரூபாய் 1000 எனில் அதற்கான வரி விகிதம் 10% ஆகவே அவர் செலுத்த வேண்டிய வரி ரூபாய் 100 ஆகும்.

**தேய்வு வீத வரி:**

- அதிகமாக வருமானம் ஈட்டுபவர்களுக்கும் குறைவாக வருமானம் ஈட்டுபவர்களுக்கும் ஒரே மாதிரியாக விதிக்கப்படும் வரி, தேய்வு வீத வரியாகும்.
- இதனால், குறைந்த வருமானம் ஈட்டுபவர்கள் பாதிக்கப்படுகின்றனர்.

**3. வரியின் முக்கியத்துவத்தைப் பற்றி விளக்குக.**

- அரசுக்கு வரிகள் மிகவும் இன்றியமையாத வளங்களாக உள்ளன.
- நலவாழ்வு, கல்வி, ஆட்சி நிர்வாக ம், உள்கட்டமைப்பு மேம்பாடு, போக்குவரத்து, வீட்டு வசதி போன்ற பிற பிரிவுகள் ஆகியவற்றிற்கு அரசுக்குச் செலுத்தப்படும் வரிப்பணத்திலிருந்து செலவிடப்படுகிறது.
- ஓய்வூதியங்கள் , வேலை வாய்ப்பு இல்லாதோருக்கான ஊக்கத்தொகை, குழந்தைப் பாதுகாப்பு போன்றவற்றிற்காகவும் நிதி ஒதுக்கப்படுகிறது.
- நாட்டின் பொருளாதார வளர்ச்சி நிலையின்மீது வரிகள் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.
- பொதுவாக, வரிகள் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்குத்(GDP) தம் பங்களிப்பை வழங்குகின்றன. வரி ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியின் நிலையை பாதிக்கும்.
- வரி பொதுவாக ஒரு நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) பங்களிக்கிறது.

**4. நேர்முக மற்றும் மறைமுக வரியை உதாரணத்துடன் விளக்குக**

**நேர்முக வரி:**

நேர்முகவரி என்பது தனியாகவோ, நிறுவனமோ நேரடியாக அரசுக்கு வரி செலுத்துவதைக் குறிக்கும். வரி செலுத்துபவர், பல்வேறு காரணங்களுக்காக அரசுக்கு நேர்முக வரியைச் செலுத்துகிறார்.

- சொத்து வரி
- தனியாள் சொத்து வரி
- வருமான வரி
- நிறுவன வரி
- அன்பளிப்பு வரி

**மறைமுக வரி:**

தொடக்கத்தில் ஒருவருக்கு விதிக்கப்பட்ட வரிச்சுமை மற்றொருவர் மீது மாற்ற இயலும்.

- சேவை வரி
- விற்பனை வரி
- கலால் வரி
- பொழுதுபோக்கு வரி
- சரக்கு மற்றும் சேவை வரி

**5. மக்கள் நலனுக்கு வரி ஏன் அவசியம் என்பதை பற்றி விளக்குக.**

- நிதி நிர்வாகத்திற்கு வருவாயை உயர்த்துவதே , வரி விதிப்பதன் நோக்கமாகும்.
- நிதிப் பற்றாக்குறையால் ஏற்படும் பாதிப்புகளைச் சமன் செய்ய, விலை மாற்றத்திற்கு உதவுகிறது.
- நிதி நிருவாக வரலாற்றில், மாநிலங்கள் வரி விதிப்பின் மூலமாகவே பல செயல்பாடுகளை மேற்கொண்டுள்ளன.
- போக்குவரத்து, சுகாதாரம், பொதுமக்களின் பாதுகாப்பு, கல்வி, நலவாழ்வுத் திட்டங்கள் ,
- அறிவியல் ஆராய்ச்சி, கலையும் பண்பாடும், பொதுப்பணி, பொதுக் காப்பீடு மேலும் பல பொருளாதார உள்கட்டமைப்புகளுக்காகவும் வரிப்பணம் செலவழிக்கப்படுகிறது.
- ஓர் அரசின் திறனுக்கேற்ப, வரிகளை உயர்த்துவது, அதன் 'நிதித் திறன்' என்றழைக்கப்படுகிறது.